Registered as a NewsPaper

விலை ரூபா:10.00

# ஈழநாதம்
மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-12

நாதம் 16 | திருவள்ளுவர் ஆண்டு 2036 | ஐப்பசி-08 | 25-10-2005 | செவ்வாய்க்கிழமை | ஓசை-250




### - புலிகளை வரவேற்பதில்லை என்ற முடிவை மீளப் பெறக்கோரி -

# கொட்டும் மழையையும் பொருட்படுத்தாது

# பெல்ஜியத்தில் திரண்ட பல்லாயிரம் தமிழர்கள்!

## ஐரோப்பிய ஒன்றியத்திடம் மகஜர் சமர்ப்பிப்பு

(பிரசெல்ஸ்)

***தமிழீழ விடுதலைப்புலிகளை ஐரோப்பிய ஒன்றிய நாடுகளில் வரவேற்பதில்லை என்ற ஐரோப்பிய ஒன்றிய முடிவை மீளப்பெற வேண்டும் எனக் கோரி கொட்டும் மழையையும் பொருட்படுத்தாது பல்லாயிரக்கணக்கான புலம்பெயர்ந்த தமிழ் மக்கள், "எழுக தமிழ்" நிகழ்வில் கலந்து கொண்டு பிரசெல்ஸ்சில் உள்ள ஐரோப்பிய ஒன்றியப்பாராளுமன்றத்தின் முன்பாகப்பேரணி ஒன்றை நடாத்தியதோடு, ஐரோப்பிய ஒன்றிய பிரதிநிதியிடம் மகஜர் ஒன்றையும் கையளித்தனர்.***

பெல்ஜியத்தின் பிரசெல்ஸ் நகரில் கொட்டும் மழையில் ஐரோப்பிய பாராளுமன்றம் முன்பாக கூடியிருந்த பல்லாயிரக்கணக்கான புகலிடத் தமிழர்கள் உரிமை முழக்கம் எழுப்பினர்.இந்தப் போராட்டத்தினிடையே தமிழர்கள் உரிமை முழக்கத்தை வலியுறுத்தும் கோரிக்கை மனுவை எழுக தமிழ் ஏற்பாட்டுக்குழுவின் பிரதி நிதிகள் கையளித்தனர். நேற்று ஐரோப்பிய நேரம் நண்பகல் 12 மணியளவில் இந்த உரிமை முழக்கப்போராட்டம் தொடங்கியது.

ஐரோப்பிய ஒன்றியத் தலைமைச் செயலகம் அருகில் இந்த நிகழ்வின் தொடக்கத்தில் பாரம்பரிய நாதஸ்வர இசை வாசிக்கப்பட்டது. பின்னர் பொதுச்சுடரினை தமிழ் நாட்டின் விடுதலைச் சிறுத்தைகள் இயக்கப் பொதுச் செயலாளர் தொல். திருமாவளவன் ஏற்றிவைத்தார். தமிழீழத் தேசியக் கொடியை தமிழ் தேசியக்

(12ஆம் பக்கம் பார்க்க)



## நெப்போலியனையும் ,அலெக்சாண்டரையும் ஒன்றிணைத்த தலைவர் பிரபாகரன்

### பெல்ஜியத்தில் தொல். திருமாவளவன் உரை

மாவீரர் நெப்போலியனையும், அலெக்சாண்டரையும் ஒன்றிணைத்த தலைவர் அண்ணன் பிரபாகரன். நம்மை அழிக்க- ஒருவார காலத்தில் இந்தப் பொடியன்களை நசுக்கிக் காட்டுகிறோம் என்ற -ஆணவத்தோடு கொக்கரித்துக் கொண்டு சிங்கள இராணுவத்துக்கு துணையாக வந்த இந்திய இராணுவத்தை துரத்தியடித்தோம் என நேற்று பெல்ஜியத்தில் இடம்பெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு உரை நிகழ்த்திய தமிழகத்தின் விடுதலைச் சிறுத்தைகள் இயக்கப் பொதுச்செயலாளர்

(12ஆம் பக்கம் பார்க்க)

## தமிழர்களின் சுயநிர்ணய உரிமையை ஐ. ஒன்றியம் அங்கீகரிக்க வேண்டும்

### - பெல்ஜியத்தில் அல்பேர்ட்கோல் அடிகளார் கோரிக்கை

ஐரோப்பிய ஒன்றியம் தமிழீழத்தில் தமிழர்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்க வேண்டும் சுதந்திரமான தமிழீழம் மலருவதை எல்லோரும் எதிர்பார்க்கிறோம் என ஜேர்மனியின் அருட்தந்தை அல்பேர்ட் கோல் அடிகளார் தெரிவித்துள்ளார்.

நேற்று பெல்ஜியத்தில் ஐரோப்பியஒன்றியத்தின் தலைமைப்பணிமனைக்கு முன்னால் இடம்பெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு ஜேர்மனிய மொழியில் உரைநிகழ்த்தும்போது தெரிவித்துள்ளார்.

1983 யூலை படுகொலைகளின்போது தமிழ் மக்களை நான் கொழும்பில் பார்த்தேன்.

(12ஆம்பக்கம் பார்க்க)

## தேசிய இனப்பிரச்சினை விவகாரத்தில் ஐ.தே.க- சு.க. இணைந்து செயற்படமுடிவு

### -சந்திரிகா- ரணில் பேச்சில் இணக்கம்

சனாதிபதிக்கும் எதிர்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையில் நேற்று மாலை இரண்டு மணித்தியாலங்களாக பேச்சுவார்த்தை நடைபெற்றது.சனாதிபதி மாளிகையில் நடைபெற்ற இந்தப் பேச்சுவார்த்தையின்போது தேசிய இனப்பிரச்சினைவிவகாரத்தில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் ஐக்கிய தேசியக் கட்சியும் இணைந்து செயற்படுவது தொடர்பில் இரண்டு தலைவர்களும் இணக்கம்

(12ஆம்பக்கம் பார்க்க)

## விடுதலைப் பேரொளி நூல் வெளியீடு

தமிழீழ தேசியத்தலைவரின் ஆளுமைகளை வெளிப்படுத்துகிற விடுதலைப்பேரொளி நூல் லண்டனில் நேற்று முன்தினம் ஞாயிற்றுகிழமை வெளியிடப்பட்டது.

லண்டன் வோல்ட்தாம்போரஸ் மண்டபத்தில் மாலை 5.00மணிக்கு இந்த நிகழ்சி நடைபெற்றது.

(12ஆம்பக்கம் பார்க்க)

## ஈழத்தமிழர் பிரச்சினைக்கு தனிநாடுதான் தீர்வு

### - வைகோ உரை

ஈழத்தமிழர் பிரச்சினைக்குத் தனி நாடுதான் தீர்வு என்று மறுமலர்ச்சி திராவிடமுன்னேற்றக் கழகப் பொதுச் செயலர் வைகோ தெரிவித்தார்.

சென்னையில் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற ம.தி.மு.க பொதுக்கூட்டத்தில் அவர் பேசிய போதே இவ்வாறு தெரிவித்தார்.

ஈழத்தமிழர் பிரச்சினை தொடர்பாக் எந்த அறிவுஜீவியிடமும் விவாதிக்கத் தயார். திராவிட இயக்க

(12ஆம்பக்கம் பார்க்க)

## கூட்டமைப்பு- கண்காணிப்புக்குழு வவுனியாவில் சந்தித்துப் பேச்சு

தமிழ் தேசிய கூட்டமைப்பினருக்கும் இலங்கை போர்நிறுத்த கண்காணிப்புக் குழுவினருக்கும் இடையில் வவுனியாவில் நேற்று சந்திப்பு ஒன்று இடம்பெற்றுள்ளது. இந்தச் சந்திப்பின்போது எதிர்வரும் 27 ஆம் திகதி தமிழ் எழுச்சி மாநாடு தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டதாக பாராளுமன்ற உறுப்பினர் சிவநாதன் கிஷோர் தெரிவித்தார்.

வவுனியா வாழ் அனைத்து தமிழ்

(12ஆம்பக்கம் பார்க்க)

## வீரவணக்கம்

23.10.2005 அன்று தவறுதலான வெடிவிபத்தின்போது போராளி ஒருவர் சாவடைந்துள்ளார்.

● லெப்.குமுதன்/அக்கினிக் காந்தன்

(12ஆம்பக்கம் பார்க்க)

## ஐரோப்பிய ஒன்றிய அதிகாரிகளை தமிழ் சட்ட நிபுணர்கள் சந்தித்துப்பேச்சு

தமிழர் பிரதிநிதிகள், சர்வதேச சட்டநிபுணர்கள ஆகியோர் அடங்கிய குழு நேற்று ஐரோப்பிய ஒன்றியத்தின் வெளிவிவகாரக்குழுவைச் சேர்ந்த உயர்அதிகாரிகளைச் சந்தித்து கலந்துரையாடியுள்ளது.

"எழுக தமிழ்" என்ற புலம்பெயர்ந்த தமிழர்களின் எழுச்சி நிகழ்வைத்தொடர்ந்து இச்சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

இச்சந்திப்பில் சமாதான நடவடிக்கையில் ஐரோப்பிய ஒன்றியத்தின் பங்கு பற்றி விவாதிக்கப்பட்டுள்ளது.

இதில் சர்வதேச சட்டவாளரும் போராசிரியருமான உருத்திரகுமாரன், சுவீடன் உப்சலா பல்கலைக் கழக போராசிரியர் பீற்றர் சால்க், ஜேர்மனி - கசால் பல்கலைக்

(12ஆம்பக்கம் பார்க்க)

## வரிவிளம்பரம்

**புதிய பிரிவுகள் ஆரம்பம்**
**MS.Word,**
**MS-Excel, MS-Access**
**MS-Powerpoint, Windows.**
***வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன.***
தொடர்புகளுக்கு:-வின்நெற் கணணி பயிற்சிநிலையம், டிப்போவீதி, கிளிநொச்சி. (சி.13074)

## விற்பனைக்குண்டு

நல்ல நிலையில் உள்ள (2 மாத பாவனையில்) யூடி ஜெனரேற்றர் 5 Vயும் உழவு இயந்திரம் பெட்டியுடன் 25 சிறி (இங்கிலண்ட்) விற்பனைக்குண்டு. தொடர்புகட்கு திருநகர் பிரதான வீதி, இல 76, பிள்ளையார் வார்ப்புத் தொழிலகம், கிளிநொச்சி. (T.P.0776550962) (6872)


## துயர் பகிர்கின்றோம்

எமது வித்தியாலய முதல்வர் திரு. ஞா.ரவிக்குமார் அவர்களின் அன்புத் தாயார் திருமதி இலட்சுமி ஞானசேகரம் அவர்கள் இறைபதம் அடைந்த செய்தி கேட்டுத் துயருறும் அன்னாரின் குடும்பத்துடன் துயரினைப் பகிர்ந்து கொள்வதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**பாடசாலைச் சமூகம்,**
**கிளி/நாகேஸ்வர வித்தியாலயம்,**
**புளியம்பொக்கணை.**
(6884)

## பிறந்தநாள் நினைவலைகள்

| மண்ணில் | | விண்ணில் |
|---|---|---|
| 1976 | | 2004 |
| - | | - |
| 10 | | 12 |
| - | | - |
| 25 | | 26 |



### செந்தூர்ச்செல்வன்-ரூபமாலா (குஞ்சு)

எனது மனைவியின் இன்றைய
பிறந்த நாள் நினைவில் எனது மகன்
ரவிக்காந்தையும் நினைவு கூருகின்றேன்.

என்றும் உங்கள் நினைவுடன்
**து.செந்தூர்ச்செல்வன் (செல்வன்)**
கள்ளப்பாடு, முல்லைத்தீவு.
(6632)

## சாவு அறிவித்தல்

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 10 | | 21 |
| - | | - |
| 11 | | 10 |
| - | | - |
| 1927 | | 2005 |



காலம் சென்ற

### நாகலிங்கம் வள்ளிப்பிள்ளை

**உன் புன்னகை கண்டு ஆறாய்**
**பெருகிய ஆனந்தக் கண்ணீர்**
**இன்று ஓலமிட்டு நாம் அழவா**
**எம்மை விட்டு நீ பிரிந்தாய்.**

உன்பிரிவால் துயருறும்
**மக்கள், மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள்,**
**பூட்டப்பிள்ளைகள்.**

*வீ.சி றோட்*
*ஒட்டுசுட்டான்*
*சிவன்கோவிலடி*
(6633)

COMITE INTERNATIONAL GENEVE

## Vacancy Announcement
## Secretary / Welcome Assistant

The International Committee of the Red Cross, Kilinochchi Subdelegation, is seeking for a dedicated female professional willing to assume responsibilities as a **Welcome Assistant/ Secretary**.

The candidate should have the following **qualifications**:

- ☒ Completion of 'A' Level Education. Higher (university) degree preferred
- ☒ Excellent computer-literacy
- ☒ Excellent spoken and written English and Tamil
- ☒ Working experience with an international organization and/or in a secretarial position
- ☒ Professional qualification in secretariat

. **Core responsibilities** include:

- ☒ Drafting of external correspondence in Tamil / English
- ☒ Reception and handling of internal / outgoing correspondence
- ☒ Filing of institutional documents
- ☒ Preparation of accommodation arrangements for incoming visitors
- ☒ Conduct welcome-briefing for arriving visitors / expatriates
- ☒ Assume team-leader responsibilities for a team of 8 house-maids

**Employment Conditions:**

According to ICRC's National Scale and employment conditions

We encourage suitable candidates to send their complete CVs to ICRC's office in Kilinochchi before **Thursday, 3rd of November 2005**. Qualified candidates will be contacted for interviews.

**INTERNATIONAL COMMITTEE OF THE RED CROSS**
Subdelegation Kilinochchi
Iraniamadhu Junction
Kilinochchi
Phone: 071 237 56 97 / 071 229 66 80 (சி-13116)

நிகொட் – முல்லைத்தீவு
அமைய அடிப்படையிலான தொழில்நுட்ப (Technical Officer)
உத்தியோகத்தர்களுக்கான

## பதவி வெற்றிடம்

முல்லைத்தீவு மாவட்டத்தில் நிகொட் திட்டத்தை அமுல்படுத்துவதற்குத் தேவையான தொழில்நுட்ப உத்தியோகத்தர்களை நியமிப்பதற்காக கீழ் கண்ட தகைமைகள் உள்ளவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**01.தகைமைகள்:**

*அ. கல்வித்தராதரம்*

*1 க.பொ.த(சா/த) பரீட்சையில் சித்தி.*

*ஆ. தொழில்நுட்பத் தராதரம்.*

1. தேசிய தொழில்நுட்ப சான்றிதழ் - NCT அல்லது தேசிய தொழில்நுட்ப டிப்ளோமா சான்றிதழ் NDT (கட்டட நிர்மாணம்) அல்லது கட்டட நிர்மாண தொழில்நுட்ப சான்றிதழ் (BCT)
2. தொழில்நுட்ப சேவையில் உள்ள அனுபவம் சம்பந்தமான தராதரப்பத்திரங்கள்.

**02.சேவை நிபந்தனை:**

1. இந்நியமனம் முற்றுமுழுதாக அமைய அடிப்படையிலானதாகும்.
2. செயற்படுத்தப்படும் திட்டங்களின் கால எல்லைக்கு அமைவாக அமைய தொழில்நுட்ப உத்தியோகத்தர்களின் சேவைக்காலம் நீடிக்கப்படும்.
3. வேதனமும் ஏனைய படிகளும் அரச பொதுநிர்வாக அமைச்சின் சுற்றறிக்கைகளுக்கு ஏற்புடையதாக அமையும்.
4. வேதனங்களும், ஏனைய படிகளும் வழங்கப்படும் காலம் செயற்படுத்தப்படும் உபகருத்திட்டங்களின் கால எல்லைக்கு அமைவாகவே அமையும். ஆயினும் பல்வேறு உபகருத்திட்டங்கள் நடைமுறைப்படுத்த இருப்பதனால் தொடர்ச்சியாக பல உபகருத்திட்டங்களில் வேலைவாய்ப்பினைப் பெறுவதற்கு வாய்ப்புக்கள் உண்டு.

**03.** மேற்படி 1ஆம் பந்தியில் குறிப்பிட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்யும் விண்ணப்பதாரிகள் தங்கள் சுயவிபரங்களுடன் (Bio-Data) கூடிய விண்ணப்பங்களை பதிவுத்தபால் மூலம் அரசாங்க அதிபர், கச்சேரி, முல்லைத்தீவு என்ற முகவரிக்கு 2005.11.11ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்கப்படவேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "நிகொட் தொழில்நுட்ப உத்தியோகத்தர்களுக்கான பதவி" எனக் குறிப்பிடல்வேண்டும்.

**திருமதி இமெல்டா சுகுமார்,**
**அரச அதிபர், மாவட்ட செயலாளர்,**
**முல்லைத்தீவு.**
(சி-13115)


ஒக்ரோபர் வாசிப்பு மாதம்
*ஆசிரிய இடமாற்றங்களும் அரசியல் தலையீடும்*
வாசியுங்கள்

ஆசிரியர்களுக்கான மாத இதழ்
**அகவிழி**
ஆசிரியத்துவ நோக்கு

வருடாந்தச்சந்தா ரூ.300 மட்டுமே
தொடர்புகளுக்கு
AHAVILI,3,Torrlngton Vvenue,colombo-7,Srilanka,
TEL:011-2506272 E-MAIL:ahavili @ Viluthu.org

-44 வருடங்களின் பின் தமிழகத்தில் கனமழை-

# 200 கிராமங்கள் வெள்ளத்தில் மூழ்கின; 10 பேர் பலி; குளங்கள் உடைப்பெடுக்கும் அபாயம்

(சென்னை)


**தமிழகத்தின் வட மாவட்டத்திலும், கர்நாடக காவிரிநீர்ப்பிடிப்பு பகுதிகளிலும் பெய்த கன மழை காரணமாக பத்திற்கும் மேற்பட்டோர் பலியாகியுள்ளனர். பல்லாயிரக்கணக்கான வயல்நிலங்கள் வெள்ளக்காடாகி உள்ளன. 200 கிராமங்கள் நீரில் மூழ்கியுள்ளன. 44 வருடங்களின் பின்னர் மேட்டூர் அணை நிரம்பியுள்ளது. மாநிலங்களில் உள்ள பெரும்பாலான குளங்கள் நிரம்பி உடைப்பெடுக்கும் அபாயம் தோன்றியுள்ளது.**

கடந்த இரு தினங்களாக இந்த மாநிலங்களில் தொடர்ந்து மழை பெய்து வருகின்றது. காவிரி நீர்ப்பிடிப் புப் பகுதிகளில் பெய்துவரும் தொடர் மழை காரணமாக மேட்டூர் அணைக்கு நீர்வரத்து அதிகரித்து பெரும் பகுதி நீர் அணையில் இருந்து திறந்து விடப் பட்டுள்ளது. மேட்டூர் அணைக்கு நீர் வரத்து மேலும் அதிகரிக்குமானால் நிலைமை மோசமடையும் எனத் தெரி விக்கப்படுகிறது.


பதினொரு மாவட்டங்களில் வெள்ள அபாய அறிவிப்பு வகுக்கப்பட்டுள் ளது. சேலத்தை அண்டியபகுதிகளில் மட்டும் இருநூறுக்கும் மேற்பட்ட கிரா மங்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. மக்கள் பாதுகாப்பான இடங்களை நோக்கி இடம்பெயர்ந்து வருகின்றனர்.

சென்னையில் தமிழக முதலமைச் சர் பாதுகாப்பு மற்றும் விசேட நட வடிக்கைகள் குறித்து உயரதிகாரி களுடன் கலந்துரையாடியுள்ளனர்.

இரண்டு வருடத்துக்குப்போதுமான மழை இரண்டு நாட்களில் பெய்துள்ள தாக ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.



ஐக்கிய நாடுகள் சபை நேற்று தனது அறுபதாவது ஆண்டு விழாவைக் கொண்டா டியது



பாக்தாத்தின் வடக்கே அல்சாப் மாவட்டத்தில் ஈராக்கிய பொலிஸ் ரோந்து அணியினர் மீது கார்க்குண்டுத் தாக்குதல் நடத்தப் பட்டது. காரின்சிதைவுகளை உள்ளூர்வாசிகள் பார்வையிடுகின்றனர்.

# எல்லைக்கோட்டில் ஐந்து வழிகள்; பாகிஸ்தான் இந்தியாவிடம் கோரிக்கை

(இஸ்லாமபாத்)

பூகம்பத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவும் நோக்கத்தில் கட்டுப்பாட்டு எல்லைக் கோட்டில் ஐந்து வழிகளைத் திறக்க இந்தியா சம்மதிக்க வேண்டுமென பாகிஸ்தான் வேண்டுகோள் விடுத்துள்ளது.

பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீர் பகுதிகளில் நிவாரணப் பணிகளில் காஷ்மீர் மக்களும் பங்கேற்பதற்கு வசதியாக கட்டுப்பாட்டு எல்லைக் கோட்டின் சில வழி களைத் திறந்து விடலாமென பாகிஸ்தான் அதிபர் முஷாரப் கருத்துத் தெரிவித்திருந்தார். இதை இந்திய தரப்பில் முதற்கட்டமாக வரவேற்றாலும் பின்னர் நாட்டின் பாதுகாப்பை கவனத்தில் கொண்டு இக்கருததை இந்தியா பரிசீலித்து வருகிறது. இந்நிலையில் கட்டுப்பாட்டு எல்லைக்கோடு அருகே மூன்று நிவாரண முகாம்கள் அமைக்கப்படும் என்றும் இந்தியத் தரப்பில் நேற்று முன்தினம் அறிவிக்கப் பட்டது.


இந் நிலையில் கட்டுப்பாட்டு எல்லைக் கோட்டுப் பகுதி யில் சில வழிகளை திறக்கவேண்டும் என்ற கோரிக் கையை பாகிஸ்தான் நேற்று மீண்டும் வலியுறுத்தியது. இது குறித்து செய்தி நிறுவனம் ஒன்றுக்குப் பேட்டி அளித்த பாக். தகவல் தொடர்பு அமைச்சர் ஷேக் ரஷித் அகமது பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீரில் நடைபெறும் நிவாரணப் பணிகளில் காஷ்மீர் மக்களும் பங்கேற்ற வசதியாக கட்டுப்பாட்டு எல்லைக் கோட்டில் ஐந்து இடங் களில் வழி ஏற்படுத்த வேண்டும். நாங்கள் எங்கள் கோரிக் கையை தெரிவித்துவிட்டோம் இனி முடிவெடுப்பது இந்தி யாவின் கைகளிலுள்ளது இந்த விடயத்தில் இந்தியா நல்ல முடிவை எடுக்கும் என்று நாங்கள் நம்புகின்றோம் என்றார்.

## கறுப்பினச் சிறுமி மீது பாலியல் பலாத்காரம்; கலவரத்தில் ஒருவர் பலி; 35 பேர் காயம்

(லண்டன்)

இங்கிலாந்தில் இரண்டாவது பெரிய நகரமான பர்மிங்காமில் ஜமைக்கா நாட்டைச் சேர்ந்த 14 வயது கறுப்பின சிறுமி மீது பாலியல் பலாத்காரத்தில் ஈடுபட்டதாக வந்த செய்தியை அடுத்து அங்கு பெரும் கலவரம் ஏற்பட்டது.

பெருமளவான ஆசிரியர்களும் நீக்ரோக்களும் கலவரத்தில் ஈடுபட்டனர். இதில் ஒருவர் உயிரிழந்தார், 35 பேர் காயமடைந் தனர். அப்பகுதியில் ஏராளமான பொலிசார் குவிக்கப்பட்டு நிலைமை கட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளது.



வில்மா சூறாவளி தாக்குவதற்குமுன் ஒரு விசாலமான அலைதடுப்புச்சுவரை துவிச்சக்கரவண்டி ஓட்டுநர் கடந்துசெல்கிறார்.

## லண்டன் குண்டுத்தாக்குதலுடன் தொடர்புடைய ஒருவர் கைது

(லண்டன்)

லண்டனில் யூலை மாதம் ஏழாம் திகதி 52 பேரைப்பலி கொள்ளக்காரணமாக இருந்த குண்டுத்தாக்குலுடன் தொடர்புடைய மற்றுமொரு நபரை லண்டன் பொலிசார் நேற்று முன்தினம் கைது செய்துள்ளனர்.

மேற்கு ஜொக்சேறின் டைஸ்பரி பகுதியில் வைத்து பயங்கரவாத ஒழிப்புப்பிரிவு அதிகாரிகள் இவரைக் கைதுசெய்து பொலிசாரிடம் ஒப்படைத்துள்ளனர். இந்தப் பகுதியில் மேலும் இரண்டு வீடுகளைப் பயங்கரவாத ஒழிப்புப்பிரிவினர் தேடி வரு கின்றனர். உலக தினப்பத்திரிகைமூலம் தமக்குக் கிடைத்த தகவலைத் தொடர்ந்து இவரைத் தாம் கைது செய்திருப்பதாகப் பொலிசார் கூறினார்.

# பாதிரியார்களின் திருமண யோசனை போப்பாண்டவரால் நிராகரிப்பு

(வத்திக்கான்)

கத்தோலிக்க பாதிரியார்கள் திருமணஞ் செய்ய அனுமதியளிக்கும் யோசனையை போப்பாண்டவர் பென டிற் நிராகரித்துள்ளார்.

போப்பாண்டவராக இருந்த ஜோன் போல் மறைந்து புதிய போப்பாண்ட வர் பெனடிற் பதவியேற்று ஆறு மாதங் கள் கடந்துவிட்டநிலையில் கத்தோ லிக்க கிறிஸ்தவ மதக் கோட்பாடு களைத் தீவிரமாக அமுல்படுத்துவ தில் அவர் அதிக கவனம் செலுத்தி வருகிறார்.

இந்த நிலையில் கத்தோலிக்க கிறிஸ்தவ திருச்சபையில் பாதிரியார் கள் எண்ணிக்கை குறைந்து வருவ தாகக்கூறப்பட்டது. இதையடுத்து கத்தோலிக் ககிறிஸ்தவ திருச்சபை கூட்டத்தில் சில மாற்றங்கள் கொண்டு வரலாம் என்று யோசனை தெரிவிக்கப் பட்டது.

கத்தோலிக்க கிறிஸ்தவ பாதிரி யார்கள் திருமணஞ்செய்து கொள்ள அனுமதிக்கலாம் என்று ஒரு யோசனை தெரிவிக்கப்பட்டது. போப்பாண்ட வரின் கவனத்திற்கும் இது கொண்டு செல்லப்பட்டது.

ஆனால் கத்தோலிக்க கிறிஸ்தவ பாதிரியார்கள் திருமணஞ்செய்ய அனு மதியளிக்கும் யோசனையை அவர் நிராகரித்துவிட்டார். இந்த யோச னையை ஏற்றுக்கொள்ள முடியாது என்று அவர் திட்டவட்டமாக அறி வித்துள்ளார்.

செயின் பீற்றர்ஸ் சதுக்கத்தில் புனிதர் பட்டம் வழங்கும் நிகழ்ச்சி யிலும் பாதிரியார் பட்டம் வழங்கும் நிகழ்ச்சியிலும் கலந்துகொண்டு பேசும் போது இதை அவர் தெரிவித்தார்.



தெற்கு பாக்தாத்தில் ரோந்தில் ஈடுபட்டுள்ள அமெரிக்க இராணுவ சிப்பாய்கள்.

# ஆப்கானிஸ்தானில் பூமியதிர்வு, ஐந்து பேர் பலி; அறுவர் காயம்

(காபூல்)

ஆப்கானிஸ்தானில் நேற்று முன்தினம் ஏற்பட்ட நில அதிர்வு காரணமாக ஐந்து பேர் கொல்லப்பட்டும் ஆறு பேர் காயமடைந்துமுள்ளனர். அதேசமயம் பலர் வீடுகளை விட்டு வெளியேறியுள்ளனர் என்று பாதுகாப்பு அமைச்சுப் பேச்சாளர் ஒருவர் கூறியுள்ளார்.

இராணுவ மீட்புப் பணியாளர்கள் மற்றும் வைத்தியர்கள் இந்த மலைப் பகுதியில் பணிகளில் ஈடுபட்டுள்ளனர். எனினும் இப்பகுதியிலிருந்து கிடைக் கும் தகவல்கள் குறைவாக இருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

மலைப்பகுதிக்கு அருகிலுள்ள ஐந்து கிராமங்கள் சேதமடைந்திருப்பதாக மாகாண ஆளுனர் தெரிவித்தார். அனேகமான வீடுகள் மண்ணினால் கட்டப்பட்ட காரணத்தால் அதிக பலம் வாய்ந்ததாக இல்லையென்றும் தெரிவிக்கப்படு கின்றது. இப்பகுதி மக்கள் நீர் மற்றும் உணவுப் பற்றாக்குறையை எதிர் நோக்கவேண்டியிருப்பதாக அவர் மேலும் கூறினார்.



பாகிஸ் தானில் பூகம்பம் தாக்கிய பகுதிகளில் பனிக்குளிரில் இருந்து தப்ப தீயில் குளிர் காய்கின்றனர்.

# அம்பாறை எல்லைப் பகுதியில் தமிழரின் காணிகள் சிங்களவரால் ஆக்கிரமிப்பு

## மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு

(அம்பாறை)

**அம்பாறை எல்லையிலுள்ள தமிழ் பேசும் மக்களின் தொட்டாச் சுருங்கி வட்டைக்குச் சிங்கள மக்கள் உரிமை கோருகின்றார்கள். இச்சிங்கள விவசாயிகள் கடந்த 35 வருட காலமாக மேற்படி 174 ஏக்கர் காணிகளை ஆக்கிரமித்து விவசாயம் செய்து வருவது குறிப்பிடத்தக்கது.**

மல்வத்தை, வீரமுனை, சம்மாந்துறை, காரைதீவு, கல்முனை, பாண்டிருப்பு ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 54 தமிழ் பேசும் விவசாயிகளினுடைய இந் நிலத்திற்கு 1964 களில் அம்பாறைக் கச்சேரி "எல்.டி.ஓ பேர்மிட்" வழங்கியுள்ளது.

அம்பாறை எல்லையிலுள்ள இக்காணியை 1950 களில் இத்தமிழ் பேசும் மக்கள் காடுவெட்டி உருவாக்கினார்கள். இதற்கு 1964 இல் "பேர்மிட்" வழங்கப்பட்டது. பின்பு 1970 களில் நிலவிய இன முரண்பாட்டுச் சூழலைப் பயன்படுத்தி அருகிலுள்ள புத்தங்கலக் கிராமத்தைச் சேர்ந்த சிங்களவர்கள் இக்காணியை ஆக்கிரமித்து வயல் செய்கையில் ஈடுபட்டு வந்தனர். இதற்குப் புத்தங்கலச் சமயத்துறவி ஒருவர் முன்னின்று செயற்பட்டதால் அப்போதைய அரசியல் வாதிகளும் நழுவல் போக்கைக் கடைப்பிடித்தனர். தொடர்ந்து நிலவிய முரண்பாட்டுச் சூழலால் தமிழ் பேசும் மக்களால் அங்கு செல்ல முடியவில்லை. அப்படிச் சென்றவர்களும் அங்குள்ளவர்களால் விரட்டியடிக்கப்பட்டார்கள் என்று கூறப்படுகின்றது. 35 வருட காலம் கடந்து விட்ட நிலையில் இன்று ஆக்கிரமித்த சிங்கள விவசாயிகள் புதுப் பிரச்சினையொன்றைக் கிளப்பியுள்ளனர். அதாவது அக்காணி தங்களுடையதே அதற்கான காணிப் பேர்மிட்டை தமக்கு வழங்க வேண்டும் என்பதே அக் கோரிக்கையாகும். இது தொடர்பாக அம்பாறை மனித உரிமை ஆணைக்குழுவிடம் அவர்கள் முறைப்பாடும் செய்துள்ளனர். இப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கான மாநாடொன்று எதிர்வரும் 03.11.2005 காலை 9.30 மணிக்குச் சம்மாந்துறைப் பிரதேச செயலகத்தில் நடைபெறவுள்ளது. மனித உரிமை ஆணைக் குழு இரு சாராரையும் இக் கூட்டத்திற்கு அழைத்துள்ளது. பிரஸ்தாப 54 தமிழ்பேசும் காணிச் சொந்தக் காரர்கள் அல்லது அவர்களது பின்னுரித்தாளர்கள் உரிய ஆவ ணங்களுடன் அன்று கட்டாயம் சமுகமளிக்குமாறு சம்மாந்துறைப் பிரதேச செயலாளர் எம்.எம்.நசீர் கேட்டுள்ளார்.

## தொழில் துறை மேம்பாட்டிற்கு சுழற்சி முறைக்கடன் வழங்கல்

(முல்லை)

சுனாமியால் பாதிக்கப்பட்ட முல்லை மீனவர்களின் தொழில்துறையினை மேம்படுத்தும் நோக்குடன் டி.ஆர்.சி நிறுவனம் சுழற்சி முறைக்கடனை சமாசம் ஊடாக வழங்கி வருகின்றது.

முல்லை மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசத்திற்கு ரூபா இரண்டரைக் கோடி வழங்கியுள்ளது.

முதற்கட்டமாக 50 இலட்சம் ரூபா மீனவர்களுக்கு வழங்கப்பட்டு இரண்டாவது கட்டமாக கடந்த 19ஆம் திகதி தொடக்கம்தற்போது வரை ஒரு கோடி ரூபா சுழற்சி முறைக் கடனாக வழங்கப்பட்டு வருவதாகவும் முல்லை மாவட்ட கடற் தொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசத்தலைவர் அ.மரியராசா தெரிவித்தார்.

இந்த சுழற்சி முறைக்கடன் மீனவர்கள் அழிந்த உபகரணங்களை புதிதாக வாங்குவதோடு தொழில் துறையை மேம்படுத்தவும் உதவக் கூடியது எனவும் தெரிவித்தார். (20)

## தாழங்குடாவில் தேடுதல்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு தாழங்குடாவில் சிறிலங்கா விசேட அதிரடிப் படையினர் நேற்று முன்தினம் சுற்றி வளைத்து தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டனர். இதில் பெருமளவிலான படையினர் ஈடுபட்டிருந்தனர்.

படையினர் இக்கிராமத்தைச் சுற்றி வளைத்து வீதியால் சென்றவர்களையும் சோதனை செய்ததோடு வீடு வீடாகச் சென்று சோதனை நடத்தினர்.

## சுனாமி நிவாரண வெட்டை நிறுத்த அரச அதிபரிடம் கோரல்

(முல்லை)

முல்லைத்தீவில் சுனாமியால் பாதிக்கப்பட்டோருக்கு வழங்கப்படும் நிவாரண முத்திரைகளை வெட்டுவதை நிறுத்துமாறு முல்லை மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்க சமாசத் தலைவர் அ.மரியராசா அரசாங்க அதிபரிடம் கோரிக்கை விடுத்துள்ளார்

இது தொடர்பாக தெரியவருவதாவது சுனாமி ஏற்பட்டு ஒன்பது மாதங்கள் கடந்த நிலையில் கடற்றொழிலினையே நம்பிவாழும் இப்பகுதி மக்களுக்குஇதுவரை 90வீத படகுகள் மட்டுமே வழங்கப்பட்டுள்ளன. இதற்கான வெளியிணைப்பு இயந்திரங்கள்,வலைகள் என்பன முழுமையாக வழங்கப்படாமல் இருக்கும் இந்த நிலையில்சுனாமி நிவாரண முத்திரையினை வெட்டும் போதும் மக்கள் பெரும் கஷ்டத்தினை எதிர்நோக்குவார்கள் எனவும், முழுமையாக தொழில் உபகரணங்கள் வழங்கிய பின்பு இந்த நடவடிக்கையினை தொடருமாறும் கோரிக்கை விடுத்துள்ளார்.

## 135 நிரந்தர வீடுகள் அமைப்பு

(திருமலை)

சுனாமியால் பாதிக்கப்பட்ட ஈச்சிலம்பற்றுப் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட கல்லடிக் கிராம மக்களுக்கான நிரந்தர வீடுகளை அமைத்துக் கொடுக்கத் திருமலை மாவட்டத் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினர் முன்வந்துள்ளனர். இதன் படி 135 நிரந்தர வீடுகளை அமைத்துக் கொடுக்கத் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் முன்வந்திருப்பதுடன், தற் போது 80 வீடுகள் கட்டி முடிக் கப்பட்டிருப்பதுடன் 55 வீடுகள் விரைவில் கட்டி முடிப்பதற்குரிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.



வடிகால் சீரமைக்கப்படாமையின் காரணமாக மழை வெள்ளம் வழிந்தோட முடியாத நிலையில் பரந்தன் சந்தி மற்றும் பேருந்து தரிப்பு நிலையத்தை அண்டிய பகுதிகளில் தேங்கி நிற்பதை படத்தில் காணலாம். (படம் சோதி)



பரந்தன் சந்திக்கருகாமையில் அமைக்கப்பெற்றுள்ள பொதுக்குடி நீர் கிணற்றின் உட்சுவர்கள் பூசப்படாத நிலையில் உள்ளமையின் காரணமாக மழை நீர் உட்புகுந்தமையினால் குடி நீர் மாசடைந்துள்ளது இதனால் இந்நீரை பாவனைக்குட்படுத்த முடியாத நிலையுள்ளது (படம் சோதி)

## துணுக்காய் பிரதேசத்தில் இடி தாங்கி அமைக்க கோரல்

(மல்லாவி)

துணுக்காய் பிரதேச செயலர் பிரிவில் இடிதாங்கியின்றி மக்கள் பயப் பீதியுடன் இருந்து வருகின்றனர். அண்மையில் பருவகால மழை ஆரம்பித்துள்ள நிலையில் மின்னல் தாக்கியதில் துணுக்காய் பிரதேசத்தில் பாலை மரங்கள் முறிந்து வீழ்ந்தன.

அண்மையில் மல்லாவி நகர்ப் பகுதி ஒருவர் மின்னல் தாங்கியதில் மரணமாகியும் உள்ளார்.

இந் நிலையில் துணுக்காய் பிரதேசத்திற்கு ஒரு இடிதாங்கியை சம்பந்தப்பட்டவர்கள் அமைத்துத் தரும் படி மக்கள் வேண்டி நிற்கின்றனர்.(2[illegible])

## வடக்கு-கிழக்கில் சுகாதார மேம்பாட்டிற்கு ஆசிய அபிவிருத்தி வங்கி நிதி ஒதுக்கீடு

வடக்குக்கிழக்கு மாகாணத்திலுள்ள சகல மாவட்டங்களிலும் சுகாதாரத்தை விருத்தி செய்யும் நோக்கில் எட்டு மாவட்டங்களிலும் சுகாதார நடவடிக்கைகள் மேற்கொள்வதற்கு ஆசிய அபிவிருத்தி வங்கி நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

வடக்குக் கிழக்கு மாகாணத்திலுள்ள அனைத்து மாவட்டங்களிலும் சுகாதார சீர்கேடுகளையும், மந்தபோசணை, எயிட்ஸ் ஆகிய வற்றைத் தவிர்க்க நீண்ட கால செயற்றிட்டமொன்றை மேற்கொள்வதற்காக ஆசிய அபிவிருத்தி வங்கி 30 கோடி ரூபா நிதியினை ஒதுக்கீடு செய்துள்ளது.

இத் திட்டம் 2009 ஆம் ஆண்டு பூர்த்தியடைந்து விடும் என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

## மேஜர் பசீலன் முன்பள்ளி அடிக்கல் நாட்டும் நிகழ்வு

(முல்லை)

சிறுவர் பாதுகாப்பு நிதியத்தின் நிதியுதவியுடன் முன்பள்ளிக் கல்வி மேம்பாட்டு நிலையத்தின் அனுசரணையுடன் முல்லை பொருளாதார அபிவிருத்தி நிறுவனத்தால் மேஜர் பசீலன் முன்பள்ளிக்கான அடிக்கல் நாட்டு விழா முள்ளியவளை குமாரபுரக் கிராமத்தில் கடந்த சனிக்கிழமை காலை 10.30 மணிக்கு நடைபெற்றது.

முல்லை. பொருளாதார அபிவிருத்தி நிறுவன இணைப்பாளர் சுரேஸ் தலைமையில் ஆரம்பமான நிகழ்வில் மங்கல விளக்கினை குமாரபுரம் கிராம அலுவலர் சிவராசா, குமாரபுரம் மாதர் கிராம அபிவிருத்தி சங்கத் தலைவி திருமதி பு.விஜயகுமாரி ஆகியோர் ஏற்றினார்கள். தமிழீழ தேசியக் கொடியினை மாவீரர் மேஜர் பசீலனின் தாயார் ந.தங்கம்மா ஏற்றினார்.

தொடர்ந்து முன்பள்ளிக்கான அடிக் கல்லினை மணற் குடியிருப்பு கிராம அலுவலர் சௌந்தரநாயகம், மாவீரர் மேஜர் பசீலனின் தாயார் ந.தங்கம்மா கிராம அலுவலர் சிவராசா வடகிழக்கு முன்பள்ளி கல்வி மேம்பாட்டு நிலைய விசேட பார்வையாளர் த.சுசிகரன் ஆகியோர் நாட்டினார்கள்.

தொடர்ந்து கருத்துரைகளை முள்ளியவளைப் பிரதேச முன்பள்ளி அபிவிருத்தி தலைவர் தங்கவேலாயுதம், கிராம அபிவிருத்தி வங்கி பணியாளர் மணற்குடியிருப்பு கிராம அலுவலர் சௌந்தரநாயகம் ஆகியோர் நிகழ்த்தினார்.

இந்த நிகழ்வில் முன்பள்ளி ஆசிரியர்கள் பெற்றோர்கள், நிறுவனப் பணியாளர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (20)

## சிறிலங்கா பொலிசார், படையினர் காத்தான் குடியில் பெருமளவில் குவிப்பு!

### -விசேட ரோந்தும் அதிகரிப்பு

(மட்டக்களப்பு)

காத்தான்குடிப் பிரதேசத்தில் கடந்த சில தினங்களாக பெருமளவிலான பொலிசாரும், அதிரடிப் படையினரும், இராணுவத்தினரும் குவிக்கப்பட்டு விசேட ரோந்து நடவடிக்கைகளில் இரவு, பகலாக ஈடுபட்டு வருவதை காணக்கூடியதாக இருக்கின்றது. திடீரென அதிகரிக்கப்பட்டுள்ள இந்தப் பாதுகாப்பு சனாதிபதித் தேர்தல் பிரசாரத்திற்காக இம்மாதம் 27ம் திகதி வருகை தரும் பிரதமர் மகிந்த இடம்பெறும் கூட்டத்திற்கு முன் கூட்டிய பாதுகாப்பாக இருக்கலாம் என தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, ஆரையம்பதி ஊர் வீதியிலும் கடந்த 22ஆம் திகதி விசேட இராணுவ உந்துருளி படையணியினரும் இவ்வீதியால் வந்த அனைத்து உந்துருளி ஓட்டுனர்களைச் சோதனையிட்டதுடன் இப்படையணியினர் காத்தான்குடி பிரதேசத்தி னுள் ரோந்து நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். கவசவாகனம் சகிதம் அதிரடிப் படையினர் இரவு வேளைகளில் ரோந்து நடவடிக்கையில் அதிகமாக ஈடுபடுவதையும் அவதானிக்க முடிகின்றது.

# மீள்குடியமர்வுக்கு மகஜர்கள் சமர்ப்பித்தும் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை

## தென்மராட்சி பொது அமைப்புக்கள் ஒன்றியம் விசனம்

(தென்மராட்சி)

**யாழ்.தென்மராட்சியில் பொதுமக்களது வாழ்விடங்களை ஆக்கிரமித்துள்ள இராணுவ அதியுயர் பாதுகாப்பு வலையங்களை அகற்றி அங்கு மக்களை மீளக்குடியமர்த்த நடவடிக்கை எடுக்கு மாறு கோரி பெருமளவான மகஜர்கள் கண்காணிப்புக் குழுவினரிடம் கையளிக்கப்பட்டுள்ள போதும் இது வரையில் உரிய நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்படவில்லையென தென்மராட்சி பொது அமைப்புக்கள் ஒன்றியம் விசனம் தெரிவித்துள்ளது.**

தென்மராட்சியில் நிலை கொண்டிருக்கும் சிறிலங்கா இராணுவத்தின் பாதுகாப்பு வலயக்கெடுபிடி நடைமுறைகளால்,சுமார் 4000 குடும்பங்கள் தமது சொந்த இடங்களில் சென்று மீளக் குடியமர முடியாது தொடர்ந்தும் அகதிமுகாம்களிலும் நண்பர், உறவினர் வீடுகளிலும் அகதி வாழ்வு வாழ்ந்து வருகின்றனர்.

இவ்வாறு வாழ்ந்துவரும் மக்கள் தமது வாழ்விடங்களை ஆக்கிரமித்து நிற்கும் இராணுவத்தை வெளியேற்றி யுத்த நிறுத்த ஒப்பந்தத்தின் பிரகாரம் மீள் குடியமர்வையும் இயல்பு வாழ்வையும் உறுதிப்படுத்தக் கோரி பாதிக்கப்பட்ட மக்கள் மகஜர்களை இலங்கை யுத்த நிறுத்தக் கண்காணிப்புக்குழுவினரிடம் கையளித்துள்ளனர்.

எனினும் அவர்கள் இதற்கு உரிய நடவடிக்கைகளை எடுக்காதிருப்பதால் மக்களின் மீள் குடியமர்வும் இயல்பு வாழ்வும் பாதிக்கப்பட்டுள்ளதாகச் சுட்டிக்காட்டியே தென்மராட்சிப் பொது அமைப்புக்கள் விசனம் தெரிவித்துள்ளன. (33)

# தேசிய பாடசாலைகளின் தொண்டர் ஆசிரியர்களுக்கு நியமனம்

(யாழ்ப்பாணம்)

வடக்குகிழக்கில் உள்ள தேசியப் பாடசாலைகளில் தொண்டர் ஆசிரியர்களாகப் பணியாற்றி வருவோருக்கு நிரந்தர நியமனம் வழங்க சம்பந்தப்பட்ட அமைச்சு நடவடிக்கை எடுத்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நீண்ட காலமாக தேசியப் பாடசாலைகளில் தொண்டர் ஆசிரியர்களாக பணியாற்றி வருவோர் தொடர்பில் தொழிற்சங்கங்களும், தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களும் அரசின் பார்வைக்குகொண்டு வந்ததை அடுத்தே தற்பொழுது வலயக் கல்வி ரீதியாக அப்பிராந்தியத்தில் உள்ளதொண்டர் ஆசிரியர்களுக்கு நேர்முகத் தேர்வுகள் நடத்த கல்வி அமைச்சுநடவடிக்கையெடுத்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.(28)

# யாழ்.மாநகரசபை எல்லைக்குள் 12 வீதிகள் புனரமைப்பு

யாழ்.மாவட்ட மாநகரசபைக்கு உட்பட்ட மோசமாக பாதிக்கப்பட்டிருக்கும் பன்னிரெண்டு வீதிகள் புனரமைக்கப்படவுள்ளன.

திருநகர், பாசையூர், குருநகர், நாவாந்துறைவடக்கு, கந்தர்மடம், சங்கிலியன் தோப்பு, நாயன்மார்கட்டு, அரியாலைமத்தி, அரியாலை வடக்கு, கண்ணகைபுரம், வில்லூன்றி, மீனாட்சிபுரம் ஆகிய பகுதிகளின் வீதிகளே புனரமைக்க நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கின்றது. (28)

# கடல்வள மாணவர்களுக்கு போரூட் நிறுவனம் உதவி

யாழ்.பல்கலைக்கழகத்தில் கடல்வள அபிவிருத்தி மாணவர்களின் கற்றல் செயற்பாடுகளை ஊக்குவிக்கும் முகமாக அரசசார்பற்ற நிறுவனமான போரூட் நிறுவனத்தால் மூன்றுலட்சம் ரூபா பெறுமதியான மீன்பிடிப் படகு மற்றும் உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

யாழ்.பல்கலைக்கழக கடல்வள அபிவிருத்தி நிலையத்தின் பணிப்பாளர் பேராசிரியர் சித்திரவடிவேல் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், படகினையும் அதற்குரிய உபகரணங்களையும் போரூட் நிறுவனத்தின் யாழ்.மாவட்ட திட்ட இணைப்பாளர் கே.குணேந்திரதாசன், யாழ்.பல்கலைக்கழக விஞ்ஞான பீடாதிபதி இ.குமாரவடிவேலிடம் வழங்கினார். (28)

# மாவிட்டபுரம் பகுதியிலிருந்து படையினரால் சுண்ணக்கல் அகழ்வு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவிட்டபுரம் பகுதியில் இருந்து சிறிலங்காப் படையினரால் சுண்ணக்கற்பாறைகள் அகழ்ந்தெடுக்கப்பட்டு வருவதாக தொடர்ந்தும் குற்றம் சாட்டப்பட்டு வருகிறது.

இச்சுண்ணக்கற்பாறைகள் தனியார் காணிகளில் இருந்தும், விவசாய நிலப்பரப்புகளில் இருந்தும் பெருந்தொகையாக அகழப்பட்டுவருகின்றது.

இவ்வாறு அகழ்ந்தெடுக்கப்படும் சுண்ணக்கற்கள் கனரக இராணுவ வாகனங்கள் மூலம் ஏற்றிச் செல்லப்பட்டு பலாலி விமானப்படைத்தளம் மற்றும் விமான ஓடுபாதை நிர்மாணப் பணிகளுக்காகப் பயன்படுத்தப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது

படையினரது இத்தகைய நடவடிக்கைகள் மேற்படி பகுதியில் பாரிய சூழல் தாக்கங்களை உருவாக்கி வருகின்ற போதும் இந்த சுண்ணக்கற்பாறை அகழ்வுகள் நடைபெறும் மாவிட்டபுரம் பகுதி வலிகாமம் வடக்கு இராணுவ அதியுயர் பாதுகாப்பு வலயம் என்ற பெயரில் இராணுவத்தால் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளதனால் அங்குசென்று இந்தக் கல் அகழ்வை தடுத்து நிறுத்த முடியாத நிலைமை உள்ளதாக சுற்றுச் சூழல் பாதுகாப்புத்துறை அதிகாரிகள் கவலை தெரிவித்துள்ளனர். (33)

# சுனாமியில் சேதமாகிய பாடசாலைகளை மீள் நிர்மாணம் செய்ய உதவிகள்இல்லை

## ~வலயக்கல்வி அதிகாரிகள் கவலை

(யாழ்ப்பாணம்)

யாழ்.வடமராட்சியில் சுனாமி அனர்த்தத்தினால் சேதமாகிய பாடசாலைகளை மீள் நிர்மாணம் செய்வதற்கான நடவடிக்கைகள் எதுவும் துரிதப்படுத்தப்படவில்லை என வடமராட்சி வலயக்கல்விப் பணிமனை அதிகாரிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

கடந்த ஆண்டின் இறுதிப் பகுதியில் ஏற்பட்ட சுனாமி ஆழிப் பேரனர்த்தத்தினால் வடமராட்சி கரையோர பிரதேசங்களில் உள்ள 11 பாடசாலைகள் சேதமாக்கப்பட்டன.

இதனையடுத்து இப் பாடசாலைகள் தற்காலிக கொட்டகைகளிலேயே இயங்கிவருகின்றன.

எனினும் சேதமான பாடசாலைகளைப் புனரமைக்கவோ அல்லது மீள் நிர்மாணம் செய்வதற்கோ அரச மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்கள் ஆக்க பூர்வமான நடவடிக்கைகளை எடுக்கவில்லை.

இதனால் இப்பாடசாலைகளின் மாணவர்கள் தற்காலிக கொட்டகைகளிலேயே தொடர்ந்தும் கல்வி பயின்று வருவதால் இம்மாணவர்கள் உளப் பாதிப்புக்களுக்கு உள்ளாகியிருப்பதாகவும் கல்வித்திணைக்கள அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (33)

# வாய்ப்புற்றுநோய் ஆய்வுகள் யாழ்.மாவட்டத்தில் முன்னெடுப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் வாய்ப்புற்றுநோய் தொடர்பான ஆய்வுகள் மேற்கொள்ளப்படவுள்ளன என்று யாழ்.போதனாவைத்தியசாலையின் புற்றுநோய் சிகிச்சை நிபுணர் ஜெயக்குமார் கூறியுள்ளார்.

இலங்கையில் வாய்ப்புற்று நோயின் தாக்கம் அதிகமாகவுள்ளது. இதனால் இத்தகைய வாய்ப்புற்று நோயைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளுக்காக புற்றுநோய்த் தாக்கம் பற்றிய ஆய்வுகள் சகல மாவட்டங்களிலும் மேற்கொள்ளப்படவுள்ளன.

அந்த அடிப்படையில் யாழ். மாவட்டத்திலும் வாய்ப்புற்றுநோய் தாக்கங்கள் பற்றிய ஆய்வுகள் நடத்தப்படவுள்ளன.

இந்த ஆய்வு நடவடிக்கைகள் தென்மராட்சிப்பகுதியில்இருந்து ஆரம்பிக்கப்படவுள்ளது. முதற்கட்ட ஆய்வுகள் 50வயதுக்கு மேற்பட்டவர்களிடம் இருந்து செய்யப்படும் இதற்காக சுகாதாரபரிசோதகர்களுக்கும் சுகாதாரதொண்டர்களுக்கும் பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன என்றும் கூறினார். (33)

# யுத்தத்தால் பாதிக்கப்பட்ட கிராமங்களில் "அறிவாராய்ச்சி" நிலையங்கள் நிறுவ ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் யுத்தத்தால் பாதிக்கப்பட்டு பின்தங்கியுள்ள கிராமங்களில் அறிவாராய்ச்சி நிலையங்களை நிறுவுவதற்கு தீர்மானிக்கப் பட்டுள்ளதாக யாழ்ப்பாண மாவட்ட அரச அதிபர் கே.கணேஷ் அறிவித்துள்ளார்.

யாழ்.குடாநாட்டில் யுத்தத்தால் பாதிக்கப்பட்டு பின் தங்கியநிலையில் உள்ள கிராமங்களில் வாழும் இளையோருக்கு சரியான அறிவியல் வழிகாட்டல் வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்படவில்லை. இதனால் யாழ்.குடாநாட்டில் அறிவியல் வளர்ச்சி இன்றிய ஓர் இளம்சமுதாயம் தோன்றக் கூடிய அபாயகரமான சூழ்நிலை உள்ளது.

இதனைத் தவிர்க்கும் முகமாகவே யாழ்.குடாநாட்டில் அறிவாராய்ச்சி நிலையங்களை நிறுவத் தீர்மானிக் கப்பட்டுள்ளது.

யாழ்.குடாநாட்டில் போரினால் பாதிக்கப்பட்டு பின் தங்கிய நிலையில் உள்ள11கிராமங்கள் தெரிவு செய்யப் பட்டு அவற்றில் இத்தகைய அறிவாராய்ச்சி நிலையங்கள் அமைக் கப்படும். இந்த நிலையங்களில் நூலக வசதிகள் இணையத்தள சேவைவசதிகள், தொலைத்தொடர்பு சேவைவசதிகள் என்பன ஏற்படுத் தப்பட்டு இலவச சேவையாக இளையோரின் பயன்பாட்டுக்குவிடப்படும் என்றும் அவர் மேலும் கூறினார். (33)

## தென்மராட்சிப் பிரதேசத்தில் கொள்ளைச் சம்பவங்கள் அதிகரிப்பு

(தென்மராட்சி)

தென்மராட்சி பிரதேசத்தில் பல இடங்களில் தொடர்கொள்ளைச் சம்பவங்கள் இடம்பெற்று வருவதாக பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

இச்சம்பவங்களால் பொது மக்கள் பீதி அடைந்து உள்ளதுடன் பல இடங்களில் இரவு ஏழு மணிக்கு முன்னரே பொதுமக்கள் வீடுகளுக்குள் முடங்கும் நிலை ஏற்பட்டு இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதுவரை முப்பதுக்கு மேற்பட்ட இடங்களில் கொள்ளைச் சம்பவங்கள் நடைபெற்றுள்ளது. (28)

# யாழ்.கல்விவலயத்தின் முன் பட்டதாரிகள் மறியல்போராட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கல்வி வலயத்தின் முன் நேற்று பட்டதாரிகள் மறியல் போராட்டம் நடத்தியுள்ளனர். யாழ்ப்பாணம் கல்வி வலயத்தின் பணியாளர்களை போராட்டத்தில் ஈடுபட்டமை குறிப்பிடத்தக்கதாகும்

ஏற்கனவே பயிலுனர் பட்டதாரிகளாக இருந்த பலர் ஆசிரிய நியமனம் பெறுவதற்கு உரிய புள்ளிகள்





அலுவலகத்தினுள் வைத்து வெளிக்கதவுகளைப் பூட்டிப்போராட்டத்தில் பட்ட தாரிகள் ஈடுபட்டார்கள் ஏற்கனவே இடம் பெற்ற போட்டிப் பரீட்சையில்தாங்கள் தோற்றியதாகவும் இதன் அடிப் படையில் தமக்கு உரிய நியமனம் வழங்கப்பட வேண்டும் என்று கூறியுமே இந்தப் பெறத் தவறியமையைத் தொடர்ந்து அவர்கள் நடத்திய போராட்டத்தின் காரணமாக அவர்களுக்கு பாடசாலைகளில் வடக்கு கிழக்கு மாகாண கல்விஅமைச்சினால் நிதி உதவி யாளர்கள் என்ற நியமனம் வழங்க நடவடிக்கை யெடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (41)




# விளையாட்டு அரங்கு

## தடையற்ற முன்னேற்றம்

விளையாட்டுத்துறைகளில் முஸ்லிம் பெண்கள் பங்கு கொள்வது அபூர்வமானதாகும். எனினும் இந்தியாவின் ஆந்திர மாநிலம் ஹைதராபாத்தைச் சொந்த இடமாகக்கொண்ட சானியா மிர்சா டெனிஸ் போட்டிகளில் புரட்சிகரமான முறையில் முன்னேற்றம் கண்டுள்ளார். அவரது வளர்ச்சி சர்வதேச சஞ்சிகையான ரைம் (Time) சஞ்சிகையில் முதல் பக்கத்தில் இடம்பெறும் தகவலாகவுள்ளது.

அந்த சஞ்சிகை சானியாவை புதிய டென்னிஸ் நட்சத்திரமாக புகழ்ந்துள்ளது. கடந்த மாதம் நடைபெற்ற அமெரிக்க ஓபன் டென்னிஸ் தொடரின் பின்பே உலகின் கவனம் சானியா மீது திரும்பியது. அவர் அத் தொடரில் மூன்றாவது சுற்று வரை முன்னேறிய முதல் இந்திய வீராங்கனையாவார். அதன் மூலம் அவர் திறமை மிக்க வீராங்கனைகள் 16 பேரின் தரவரிசைக்குள் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளார். அவர் இறுதியாக அமெரிக்க ஓபன் டென்னிசில் உலக தரவரிசையில் முதலாவது இடத்திலுள்ள ரஷ்யாவின் மரியா சரபோவாவிடம் தோற்றார்.



சிறிது காலத்தின் முன் டென்னிஸ் தரவரிசையில் 326 ஆவது இடத்தைப் பிடித்த இவர்,மிக வேகமாக வளர்ச்சி கண்டு 32 ஆவது இடத்துக்கு முன்னேறி யுள்ளார். இவரின் முன்னேற்ற வேகத்தை ஒத்த வீராங்கனை யாருமில்லை.

முஸ்லிம் பெண்களின் சம்பிரதாய உடையான பர்தாவை இவர் மறந்துவிட்டு டென்னிஸ் உலகில் குட்டைப் பாவாடையுடனும், ரீசேட்டுடனும் போட்டிகளில் பங்கேற்று வரு கிறார். இதனால் முஸ்லிம்கள் மத நியதிகளை முன் வைத்து அவர் மீது பட்வா(FATWA) சட்டத்தை கொண்டுவந்துள்ளனர்.

1986 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 15 ஆம் திகதி பிறந்த இவர், தனது தந்தையான இம்ரானுடன் சிறுவயதில் கிரிக்கெட் போட்டிகளை ரசித்துவந்தார். எனினும் ஆறாவது வயதிலேயே டென்னிஸ் விளையாட விருப்பம் கொண்டார்.

அவர் 15 ஆவது வயதில் கொரியாவில் நடைபெற்ற ஆசிய போட்டியில் லிண்டர் பீசுடன் இணைந்து இரட்டையர் டென்னிஸ் போட்டியில் கலந்துகொண்டு வெண்கலப் பதககம் வென்றார். அதன் பின்னர் விம்பிள்டன் இரட்டை யர் போட்டியிலும் வெற்றிபெற் றார். 1999 ஆம் ஆண்டு இந்தோனேஷியாவில் நடந்த கனிஷ்ட பிரிவில் வெற்றிபெற்றது டன் இவ்வாண்டு அவுஸ்திரேலியா வில் நடைபெற்ற ஓபன் டென்னிஸில் மூன்றாம் சுற்றுவரை சென்றார். 2004 ஆம் ஆண்டு இந்திய அரசு அவருக்கு "அர்ஜுன" விருதி வழங்கி கௌரவித்தது.

2003 ஆம் ஆண்டு தரவரிசையில் 399 ஆவது இடத்திலிருந்த சானியா 2004 ஒக்ரோபரில் 193 ஆவது இடத்துக்கு முன்னேறினார். 2005 அவுஸ்திரேலியா கிராண்ட் ஸ்லாம் போட்டியில் மூன்றாவது சுற்றில் செரினாவிடம் தோற்ற போதும் 132 ஆவது இடத்துக்கு உயர்ந்தார். இறுதியாக இவ் ஆண்டு ஜப்பானில் நடைபெற்ற ஓபன் டென்னிஸ் தொடரில் அரையிறுதிவரை முன்னேறிய அவர் 31 ஆவது இடத்திற்கு முன்னேறினார்.தாய்லாந்துப் போட்டியில் இடையில் விலக வேண்டி ஏற்பட்டதால் தற்பொழுது 32 இடத்தில் உள்ளார்.

சானியா எந்தவிதமான போட்டியிலும் மனத்தளர்வின்றி நம்பிக்கையுடன் ஆடுவதுடன் தான் அடிக்கும் எல்லாப் பந்துகளும் மைதானத்துக்குள்ளேயே விழும் என்ற நம்பிக்கையுடனேயே ஆடுகிறார். அத்துடன் தனதுஆடைகளில் பொறித்துள்ள வாசகங்கள் அவரது மனப்பாங்கையும் வெளிப்படுத்துகின்றன. இறுதியாக நியூயோர்க்கில் நடைபெற்ற போட் டிகளுக்குப் பின் கிராண்ட்ஸ்லாம் தொடரை வெல்வார் என இந்தியாவின் முன்னாள் பிரபல வீரர் விஜய் அமிர்தராஜ் உறுதிப்படுத்தியுள்ளார்.

ஒரு சில இலட்சங்களை சம்பாதித்த அவர் பிரபல கிரிக்கெட் நட்சத்திரமான சச்சின் டெண்டுல்கர் ஒரு விளம்பரத்துக்கு பெறும் மூன்று கோடி ரூபாய்க்கு அடுத்தபடியான தொகையான 1.5 கோடி ரூபாவைப் பெற்று ராகுல ராவிட்டின் தொகையைச் சமன் செய் துள்ளார். எனினும் அவருக்கு மேலும் விளம் பரங்கள் மூலம் 30 கோடிரூபாய் வரை கிடைக்கலாம்.

உலக தரவரிசையில் முதலாமிடத்தைப் பிடித்துள்ள மரியாசரபோவா 20 மில்லியனைப் பெற்றாலும் சானியாவின் மதிப்பு அதிகரித்துக் கொண்டே செல்கிறது. அவர் நடிகை ஐஸ்வர்யாராய் போன்று மிகப்பெரிய விளம்பரம் ஒன்றில் நடிக்க ஒப்பந்தம் செய்துகொள்வார்.

அத்துடன் உலகில் தலைசிறந்த டென்னிஸ் பயிற்சியாளரான அவுஸ்திரேலியா வின் டோனி ரோச்சிடம் பயிற்சிபெறவிருப்பது அவரின் முன்னேற்றத்துக்கு மேலும் ஒரு படியாகும்.அத்துடன் இவரின் இலக்கு உலக தரவரிசையில் 15 ஆவது இடத்துக்கு முன்னேறுவதாகும் சானியா உலகையே மாற்றும் சக்தி படைத்தவர் என லண்டனில் இருந்து வெளியாகும் நியூஸ்டேட்மன்ட் பாராட்டி இருப்பதும் இவரின் முன்னேற்றத்துக்கான அறிகுறியாகும் என்றால் அது மிகையாகாது.

வடிவேல்



## எதிர்பாராதது

இந்தியக் கிரிக்கெட் அணி இன்று முதல் சிறிலங்கா அணியுடன் ஒரு நாள் போட்டிகளில்கலந்துகொள்கின்றது. மிக நீண்ட காலத்துக்குப் பின்னர் இந்திய மண்ணில் களமிறங்கியிருக்கும் சிறிலங்கா அணி இத்தொடரை கைப்பற்றி நாடு திரும்ப வேண்டும் என்ற கனவில் அங்கு சென்றுள்ளது.

ஆயினும் ஆரம்பத்திலேயே அவர்கள் அதிர்ச்சிக்குள்ளான சம்பவம் ஒன்று நிகழ்ந்திருப்பதை இங்கு குறிப்பிடாக வேண்டும் அதாவது கடந்த 22 ஆம் திகதி மும்பையிலுள்ள மங்கட் விளையாட்டரங்கில் நடைபெற்ற மும்பை கிரிக்கெட் சபைத் தலைவர் அணியுடனான ஒரு நாள் பயிற்சிப் போட்டியில் சிறிலங்கா அணி மூன்று விக்கெட்டுக்களால் தோல்வியடைந்தமையாகும்.

இதில் பங்குகொண்ட சிறிலங்கா அணியில் முரளிதரனும் சமிந்தவாசும் இடம்பெறாதுவிட்டாலும் சிறந்த துடுப்பாட்ட வரிசையான ஜயசூரியா, அத்தப்பத்து சங்கக்கார, மகேல அவிஸ் தில்ஷான் ஆகியோர் உள்ளிட்ட அணியே பங்குபற்றியது. எனினும் தில்சான், மஹ்ரூப் இருவரையும் தவிர ஏனைய பிரபல துடுப்பாட்ட வீரர்கள் மும்பை அணியின் பந்துவீச்சில் சுருண்டனர்.

அத்துடன் நின்றுவிடாமல் தில்கார பர்னாந்து மக்ரூப், உப்புள் சந்தன, நுவன் சொய்சா போன்றோரின் பந்து வீச்சை சமாளித்து மும்பை அணி வென்று விட்டது. இந்த "வரவேற்பு" சிறிலங்கா அணிக்கு ஏமாற்றம் அளிக்கும் ஒன்றாகவே இருக்கும்.

காரணம் சர்வதேச ஒரு நாள் போட்டி தரவரிசையில் இரண்டாம் இடத்திலிருக்கும் அவ்வணி தரவரிசையில் எட்டாம் இடத்திலிருக்கும் இந்தியாவிடம் இத்தொடரில் தோல்வியை எதிர்பார்த்துச் செல்லவில்லை.இந்திய மண்ணில் இத்தொடரை வெல்வதன் மூலம் வரலாற்றுச்சாதனை ஒன்றைப்படைக்கும் நோக்குடனேயே சென்றுள்ளது.இவ்வாறான நிலையில் மேற்படிப் பயிற்சிப்போட்டியில் கண்ட தோல்வி அணியையும் கிரிக்கெட் சபையையும் ஆழச்சிந்திக்க வைத்திருக்கும் என்பதே உண்மை.



## இங்கிலாந்தின் வெற்றிப் பயணம் ஆசிய மண்ணிலும் தொடருமா?

இங்கிலாந்து அணிக்கு அடுத்து வரும் பாகிஸ்தான், இந்தியா அணிகளுடனான டெஸ்ட் போட்டித் தொடர்கள் மிகவும் முக்கியமான / சவால் மிகு போட்டித் தொடர்களாக அமைந்துள்ளது.

டெஸ்ட் போட்டித் தரப்படுத்தலில் உலக ரீதியில் இரண்டாம் நிலையை தற்போது தக்கவைத்துக்கொண்டுள்ள இங்கிலாந்து அணி, முதல் நிலையை எட்டிப் பிடிக்க வேண்டுமானால் மேற்படி இரு அணிகளுக்கு மிடையிலான டெஸ்ட் போட்டித் தொடர்களையும் வெற்றி கொள்வதன் மூலம் அதை சாதிக்க முடியும்.

மைக்கல் வோகன் தலைமையிலான இங்கிலாந்து அணி தற்போது இளமைத் துடிப்பான வீரர்களைக் கொண்டதுடன் அவுஸ்திரேலியா அணிக்கெதிரான ஆஷஸ் டெஸ்ட் தொடரைக் கைப்பற்றி டெஸ்ட் போட்டித் தொடரில் தனது புதிய பயணத்தை ஆரம்பித்துள்ளது.

அத்துடன் தொடர்ச்சியாக ஆறு டெஸ்ட் போட்டித் தொடர்களை வெற்றி கொண்டு அதன் பலத்தை வெளிப்படுத்தி நிற்கின்றது. மேற்படி ஆறு டெஸ்ட் தொடர்களும் தென்னாபிரிக்கா, நியூசிலாந்து, பங்களாதேஷ், அவுஸ்திரேலியா ஆகிய அணிகளை ஒவ்வொரு டெஸ்ட் போட்டித் தொடரிலும் மேற்கிந்தியத் தீவை இரண்டு டெஸ்ட் போட்டித் தொடரிலும் வெற்றி கொண்டுள்ளது.

இங்கிலாந்து அணியின் இந்த டெஸ்ட் வெற்றி ஆதிக்கம் ஆசிய மண்ணிலும் தொட ருமா? என்ற கேள்வி எழுந்து வரும் அதே வேளை அதற்கான நம்பிக்கைகளும் அதி கரிக்கப்பட்டு இப்போட்டித் தொடர் குறித்து ரசிகர்கள் மத்தியில் ஒரு பரபரப்பையும், எதிர்பார்ப்பையும் ஏற்படுத்தியுள்ளன.

இதற்கு இந்தியா, பாகிஸ்தான் ஆகிய நாடுகளின் ஆடுகளங்கள் பொதுவாக சுழற்பந்து வீச்சாளர்களுக்கு சாதகமாக அமைக்கப்பட்டிருப்பதும், உலகின் சிறந்த சுழற்பந்து வீச்சாளர்களை அந்நாட்டு அணிகள் கொண்டிருப்பதுமே முக்கிய காரணமாகும். இதில் குறிப்பாக இந்தியாவின் ஆடுகளங்களே கூடுதலாக சுழற்பந்து வீச்சாளர்களுக்கு ஏற்றவாறு அமைக்கப் பட்டுள்ளன.

இதில் பாகிஸ்தான் அணியுடனான போட்டித் தொடர் என்பது இங்கிலாந்து அணிக்கு சற்று சாதகமான தொன்றென்று அமையும் என கிரிக்கெட் விமர்சகர்கள் ஆரூடம் தெரிவிக்கின்றனர்.

ஏனெனில், இதற்கு முன்னர் பாகிஸ்தான் சுற்றுலாவை மேற்கொண்ட நாசர் ஹுசைன் தலைமையிலான இங்கிலாந்து அணி டெஸ்ட் தொடரில் வெற்றிபெற்றதை சுட்டிக்காட்டி நிற்கின்றனர் மேற்படி விமர்சகர்கள். அதாவது, நாசர் ஹுசைன் தலைவராக இருந்த காலத்தில் இங்கிலாந்து அணியிருந்த பலத்தைவிட தற்போது மைக்கல் வோகன் தலைமையிலான அணியின் பலம் பன்மடங்கு அதிகரிக்கப்பட்டிருப்பதை சுட்டிக்காட்டி நிற்கும் அவர்கள் பாகிஸ்தான் அணியின் தற்போதைய பலம் குறித்த கேள்வியையும் எழுப்புகின்றனர்

ஏனெனில், பாகிஸ்தான் அணி இந்திய அணியுடனான டெஸ்ட் தொடரை அண்மையில் வெற்றிகொண்டதைத் தவிர அண்மையில் அதன் சாதனைகள் வெளிப்பட்தாகஇல்லை பாகிஸ்தானின் தற்போதைய பலமாக அதன் சொந்த மண் ணில் விளை யாடு வதையே கொள்ளலாம்.

இதேவேளை இந்திய அணியுடனான டெஸ்ட் தொடர் குறித்த எதிர் பார்ப்பு சற்று வேறுபட்ட தொன்றாகக் கருதப்படுகிறது. அதாவது இங்கிலாந்து அணிக்கு சவால் மிகு தொடராகவும் கொள்ளத்தக்கதாகின்றது.

ஏனெனில், உலகத் தரவரிசையில் இங்கிலாந்திற்கு அடுத்த நிலையில் இருப்பதோடு கடந்த இருபது ஆண்டுகளாக இந்திய மண்ணில் இதுவரை இங்கிலாந்து அணி டெஸ்ட் தொடர் எதையும் வெற்றி கொள்ள வில்லை என்பதும், இக்காலப் பகுதிகளில் இந்திய அணி எவ்வாறான பலத்துடன் இருந்ததோ இல்லையோ டெஸ்ட் தொடரை இங்கிலாந்திடம் இழக்கவில்லை என்பதும் முக்கிய மானதாகும்..

கடந்த கால இந்திய அணியை விட தற்போதே அதிக நம்பிக்கைக்குரிய வீரர்களை கொண்டிருக்கின்றது. சுழற்பந்து வீச்சில் அனில் கும்ளே, ஹர்பஜன்சிங், துடுப்பாட்டத்தில் சச்சின் டெண்டுல்கர், ராகுல் ராவிட், லஸ்மன், சேவாக் போன்ற நம்பிக்கை நட்சத்திர வீரர்களும் மற்றும் இளம் வீரர்களும் கடந்த கால சாதனையைக் காப்பாற்றுவர்கள் என நம்பப்படுகின்றது.

இங்கிலாந்து அணியைப் பொறுத்து ஆஷஸ் தொடரில் கடந்த 16 ஆண்டு கால தோல்விக்கு முற்றுப்புள்ளி வைத்த மைக்கல் வோகன் தலைமையிலான அணி இந்தியா விலும் முற்றுப்புள்ளி வைக்க வேண்டிய நிலைக்கு ஆளாகியுள்ளது.

எனவே, இவ்விரு அணிகளுடனான டெஸ்ட் போட்டித் தொடர்கள் என்பது இங்கிலாந்து அணிக்கு சவால் மிகு தொடர்களாக அமைந்து ள்ளதுடன் அதனை வெற்றி கொள்வதன் மூலம் உலக தரவரிசையில் முதல் நிலை... அடையக் கூடிய வாய்ப்பையும் பெற்றுள்ளது.

இந்த இரு டெஸ்ட் போட்டித் தொடர்களையும் வெற்றி கொண்டு தங்களது வெற்றி ஆதிக்கத்தை இங்கிலாந்து அணி தொடருமோ இல்லையோ இப்போட்டித் தொடர்கள் ரசிகர்களுக்கு பெரும் விருந்தாக அமையும் என்பதில் சந்தேகமில்லை.

சுபானந்

# தமிழீழ மீட்பு நிதிக் கடன் மீளல் - கார்த்திகை 2005

**மானிப்பாய் உதவிஅரசஅதிபர் பிரிவு**

யா/மா/ 474 திரு.சிவஞானம் சண்முகநாத்ன்.
யா/மா/ 482 திரு.மனோகரன்வலண்டயின் ஸ்பென்சர்
யா/மா/543 திரு.பூலோகசிங்கம்சோமசுந்தரம்.
யா/மா/556 திரு.துரையப்பாகுணரத்தினம்.
யா/மா/ 580 திரு.துரையப்பா நல்லதம்பி.
யா/மா/595 திருமதி.இராசம்மா சின்னத்துரை.
யா/மா/656 திருமதி.இராணி குமாரசாமி.
யா/மா/680 திருமதி.அன்னலெட்சுமி பாலசுந்தரம்.
யா/மா/728 திரு.அப்பாத்துரை முருகையா.
யா/மா/788 திரு.சின்னத்துரை இராமநாதன்.
யா/மா/802 திரு.கார்த்திகேசு செல்வரத்தினம்.
யா/மா/806 திரு.பேரம்பலம் சபாநாயகம்.
யா/மா/835 திரு.சுப்ரமணியம்குலசேகரம்.
யா/மா/887 திரு.பொன்னுத்துரை சண்முகநாதன்.
யா/மா/922 திரு.துரைச்சாமி லோகநாதன்.
யா/மா/923 திரு.சம்புகேஸ்வரக்குருக்கள் மகேஸ்வரக்குருக்கள்.
யா/மா/ 957 திருமதி.பத்மாவதிமார்க்கண்டு.
யா/மா/980 திரு.ஐயம்பிள்ளை நாதன்.
யா/மா/983 திரு.செல்லப்பா ஆறுமுகம்.
யா/மா/996 திரு.சின்னத்தம்பிகோபால்.
யா/மா/1001 திரு.செல்லையாகுணரத்தினம்.
யா/மா/1005 திருமதி. ஜெயராணிஒஸ்வல் தாசியஸ்.
யா/மா/1020 திரு.வேலுப்பிள்ளை கணேசமூர்த்தி.
யா/மா/1045 திரு.செல்லத்தம்பி மாணிக்கவாசகர்.
யா/மா/1061 திரு.இராசையா நவரத்தினம்.
யா/மா/1064 திருமதி. நல்லம்மா சோமசுந்தரம்.
யா/மா/1098 திரு.இராசையா இராசேந்திரம்.
யா/மா/1104 திரு.சின்னத்துரை இராசரத்தினம்.
யா/மா/1106 திரு.நாகேந்திரம் இராமலிங்கம்.
யா/மா/1116 திரு.குட்டியர் இராசதுரை.
யா/மா/1129 திருமதி.சம்பூரணம் செல்லப்பா.
யா/மா/1148 திரு.சின்னத்தம்பி செல்லத்துரை.
யா/மா/1153 திரு.நன்னியர் சிவகடாட்சம்.
யா/மா/1162 திரு.வல்லிபுரம் செல்வராசா.
யா/மா/1167 செல்வி.லோகேஸ்வரி சின்னத்துரை.
யா/மா/1175 திரு.சின்னவிசெல்லத்துரை.
யா/மா/1196 திருமதி. திலகவதிசண்முகநாதன்.
யா/மா/1200 திரு. ஐயாத்துரை தெட்சனாமூர்த்தி.
யா/மா/ 1215 திரு.தம்பையா வயித்திலிங்கம்.
யா/மா/1224 திரு.வேலன் ஆறுமுகம்.
யா/மா/1242 திரு.தோமா யேக்கப்.
யா/மா/1246 திரு.நாகலிங்கம் கனகரத்தினம்.
யா/மா/1265 திரு.மாணிக்கஐயர் கணேஸ்வாமி.
யா/மா/1284 திரு.ஐயன் மார்க்கண்டன்.
யா/மா/1291 திரு.வைரவன் நல்லையா.
யா/மா/1312 திருமதி.இரத்தினம் பொன்னையா.
யா/மா/1313 திருமதி.இராஜயோகேஸ்வரிஅருணாசலம்
யா/மா/1333 திருமதி. இராசமணி சுப்பிரமணியம்.
யா/மா/1334 திரு. சண்முகம் இராசலிங்கம்.
யா/மா/1357 திரு. சின்னவன் கனகராசா.
யா/மா/1364 திரு.இளையதம்பிசிவசுப்பிரமணியம்.
யா/மா/1377 திரு.ஆறுமுகம் சிவசம்பு.
யா/மா/1434 திரு.பொனிவெஸ் ஜீவம்.
யா/மா/1451 திரு.கனகறட்டினம் கதிர்காமத்தம்பி.
யா/மா/1484 திரு.மகாலிங்கசிவம் பார்வதிநாதசிவம்.
யா/மா/1485 திருமதி. பூரணம் கந்தையா.
யா/மா/1495 திருமதி. பரமேஸ்வரி இராஜசுந்தரம்.
யா/மா/ 1496 திருமதி.இராசேஸ்வரிசெந்தில்வேல்ராஜா.
யா/மா/1509 திருமதி. இராசமணி சண்முகராசா.
யா/மா/1536 திரு. நாகமணி சிவமயநந்தி.
யா/மா/1566 திரு. குணரத்தினம் தர்மலிங்கம்.
யா/மா/1567 திரு. சூசைப்பிள்ளை திருச்செல்வம்.
யா/மா/1578 திரு. நீக்கிலாஸ் ஆபிரகாம்.
யா/மா/ 1583 திரு. அகுத்தீன் ஆசீர்வாதம்.
யா/மா/1610 திரு. பொன்னையா கந்தசாமி.
யா/மா/1664 திரு.மரியாம்பிள்ளை சுவாம்பிள்ளை.
யா/மா/1672 திரு. கிருஷ்ணன் சண்முகம்.
யா/மா/1682 திரு. நடராசா துரைராசா.
யா/மா/1704 திரு. வெலிச்சோர்பிள்ளை எட்வேட்.
யா/மா/1711 திரு. சூசைப்பிள்ளை யேசுதாசன்.
யா/மா/1828 திரு.தம்புகனகரத்தினம்பூபாலசிங்கம்.
யா/மா/1862 திருமதி. முத்தம்மா இராசேந்திரம்.
யா/மா/1863 திரு.அப்பாத்துரை மகாதேவன்.
யா/மா/1865 திருமதி.மங்கையற்கரசிசெகராசிங்கம்.
யா/மா/1928 திருமதி. கனகம்மாமகாலிங்கம்.
யா/மா/1956 திரு. நவரத்தினம் சரவணபவான்.
யா/மா/1961 திருமதி. தங்கரத்தினம் குமரையா.
யா/மா/2006 திருமதி.விக்னேஸ்வரிசண்முகநாதன்.
யா/மா/2020 திருமதி. பத்மசுந்தரி சிவகுருநாதன்.
யா/மா/2029 திருமதி.விக்னேஸ்வரிதிருநாவுக்கரசு.
யா/மா/2034 திருமதி. பொன்னம்மா தம்பிமுத்து.
யா/மா/2042 திருமதி. மகேஸ்வரி சேனாதிராசா.
யா/மா/2058 திரு.சவரிமுத்துஅந்தோனிப்பிள்ளை.
யா/மா/2060 திருமதி.செல்லப்பிள்ளைஇளையதம்பி.
யா/மா/2080 திருமதி. அன்னம்மாஅந்தோனிப்பிள்ளை.
யா/மா/2089 திருமதி.செல்வரத்தினம்மதியாபரணம்.
யா/மா/2094 திருமதி.தங்கப்பிள்ளைதர்மலிங்கம்.
யா/மா/2101 திரு.சதாசிவம்தம்பித்துரை.
யா/மா/2102 திரு.ஐயாத்துரை சிவசுப்பிரமணியம்.
யா/மா/2109 திருமதி. வபுஸ்ட்டாதேவிமயில்வாகனம்.
யா/மா/2118 திருமதி.ஞானசிரோன்மணிஅழகரட்ணம்.
யா/மா/2148 திருமதி.றசினாயாகப்பு.
யா/மா/2161 திரு.இளையதம்பி வல்லிபுரம்.
யா/மா/2204 திருமதி. பரமேஸ்வரி கந்தையா.
யா/மா/2209 திருமதி. சரஸ்வதிகுமாரு
யா/மா/2210 திருமதி.இராசேஸ்வரி வயிரமுத்து.
யா/மா/2274 திரு.கந்தப்பு கோபாலசிங்கம்.
யா/மா/2281 திருமதி. கமலாவதி இராமநாதன்.
யா/மா/2286 திரு.வினாயகம் கந்தையா.
யா/மா/2292 திரு. பரமநாதபிள்ளை கந்தசாமி.
யா/மா/2294 திரு. சதாசிவம் கனகசபை.
யா/மா/2301 திரு. கணபதிப்பிள்ளை கதிரவேலு.
யா/மா/2311 திருமதி.லொறற்ரோஅந்தோனிப்பிள்ளை.
யா/மா/2345 திருமதி. பிலோமினா மரியதாஸ்.
யா/மா/2346 திருமதி. மெற்றில்டா பிரான்சீஸ்.
யா/மா/2347 திரு. வேலன் மாணிக்கன்.
யா/மா/2348 திரு. மாதன் முருகன்.
யா/மா/2350 திருமதி. லட்சுமி மாணிக்கம்.
யா/மா/2394 திரு. முத்தையா பரராசசிங்கம்.
யா/மா/2434 திரு. தம்பையா சிவரத்தினம்.
யா/மா/2462 திரு. கந்தையா சுப்பிரமணியம்.
யா/மா/2476 திரு.தொம்மைப்பிள்ளைசெபஸ்தியாம்பிள்ளை.
யா/மா/2496 திரு. வைத்திலிங்கம் துரைராசா.
யா/மா/2514 திரு. சபாபதிப்பிள்ளை தியாகராசா.
யா/மா/2559 திரு.சூசைப்பிள்ளைஅந்தோனிப்பிள்ளை.
யா/மா/2577 திருமதி.எலிசபெத்அந்தோனிமுத்து.
யா/மா/2584 திரு.கந்தையா செல்லையா.
யா/மா/2586 திரு. மேரியோசப்எட்வேட்.
யா/மா/2619 திருமதி. கனகம்மா தியாகராஜா.
யா/மா/2649 திருமதி. லூர்தம்மா சூசையப்பு.
யா/மா/2660 திரு. துரைச்சாமி முருகேசு.
யா/மா/2673 திரு. கயித்தாம்பிள்ளை மரியதாஸ்.
யா/மா/2690 திருமதி.நித்தியலட்சுமிவைத்திலிங்கம்.
யா/மா/2697 திரு.சிதம்பரப்பிள்ளை நாகமணி.
யா/மா/2734 திருமதி. இராசலட்சுமி விக்னராசா.
யா/மா/ 2739 திரு. ஞானப்பிரகாசம் சாமிநாதர்.
யா/மா/2791 திருமதி. திலகவதி நடராசா.
யா/மா/2796 திருமதி.தயானமலர்திருலோகசுந்தரம்.
யா/மா/2848 திரு. திசநாயகம்றெஜீயோகம்ஜெயராசா.
யா/மா/2855 திரு.சின்னத்தம்பி பரமசாமி.
யா/மா/2859 திருமதி. லூர்த்தம்மா பிரான்சீஸ்.
யா/மா/2876 திருமதி.மேரிலூர்துமலர் செல்வராசா.
யா/மா/2877 திருமதி. பாக்கியம் பூபாலசிங்கம்.
யா/மா/2923 திருமதி. மகேஸ்வரி சபாபதி.
யா/மா/2986 திருமதி. திரேசம்மா அல்பேட்.
யா/மா/3021 திரு.மரியாம்பிள்ளைசெபஸ்ரியாம்பிள்ளை.
யா/மா/3040 திருமதி. சிவமலர் சின்னராசா.
யா/மா/3051 திரு.சந்தியாஇஸ்தாக்கி இம்மானுவேல்.
யா/மா/3064 திருமதி.மேரிபெர்னதேத்மரியநாயகம்.
யா/மா/3083 திருமதி.மொணிக்காசவரிமுத்து பொன்னுத்துரை.
யா/மா/3101 திருமதி. திரேசம்மாவிக்ரர்.
யா/மா/3105 திருமதி.மேரிமாகிறேட் பாவிலுப்பிள்ளை.
யா/மா/3118 திரு.சவரிமுத்து அலோசியஸ்.
யா/மா/3122 திரு.மனுவேல்பிள்ளை மரியதாஸ்.
யா/மா/3225 செல்வி.பரமேஸ்வரி சின்னத்தம்பி.
யா/மா/3259 திரு.சவரிமுத்துபிலிப் இராசநாயகம்.
யா/மா/3262 திரு.வயிரமுத்து திருஞானசம்பந்தர்.
யா/மா/3267 திருமதி.அஞ்சலின்செபஸ்ரியாம்பிள்ளை.
யா/மா/3288 திரு.திருச்செல்வம்பிலிப்ஸ் யேசுரத்தினம்.
யா/மா/3310 திரு.அந்தோனிப்பிள்ளை சுவாம்பிள்ளை.
யா/மா/3324 திரு.சந்தியாப்பிள்ளைசெபஸ்தியாம்பிள்ளை.
யா/மா/3383 திரு.அந்தோனியோசேப்.
யா/மா/3388 திருமதி. மரிசலனம்மா யோசேப்.
யா/மா/3414 திருமதி. வடிவம்மா அம்பிகாநிதி.
யா/மா/3432 திருமதி. மேரிறீற்றாஆசீர்வாதம்.
யா/மா/3500 திருமதி.அலுமேலுதிருவெங்கடாசாரி.
யா/மா/3504 திருமதி. இராசமணி சுந்தரம்.
யா/மா/3514 திருமதி. செல்லமுத்து கந்தசாமி.
யா/மா/3526 திரு.விஸ்வநாதஐயர் சாமிநாதன்.
யா/மா/3686 திருமதி. புவனேஸ்வரி பரராசசிங்கம்.
யா/மா/3704 திருமதி.சாந்தாதேவிசெல்லத்துரைக் குருக்கள்.
யா/மா/3743 திருமதி. அன்னம் செல்லத்தம்பி.
யா/மா/3771 திருமதி. இரஞ்சிதம் இராயப்பு.
யா/மா/3815 திரு.வேலாயுதர் ஆறுமுகம்.
யா/மா/3856 திருமதி. அஞ்சலா செல்லத்துரை.
யா/மா/3875 திரு. செல்லத்துரைதில்லையம்பலம்.
யா/மா/3928 திரு.கந்தப்பிள்ளை நாகரத்தினம்.
யா/மா/3962 திரு.மரியான்தமியான்அருளானந்தம்.
யா/மா/3965 திரு.சிதம்பரி வைத்திலிங்கம்.
யா/மா/3977 திருமதி. தங்கரத்தினம்வெல்லவராயன்.
யா/மா/3994 திருமதி.இன்னோசியா கயித்தான்.
யா/மா/4001 திருமதி. சிவயோகரத்தினம் நடராசா.
யா/மா/4007 திருமதி.எலிசபேத் மரியாம்பிள்ளை.
யா/மா/4008 திருமதி.றெஜீனாகிறகோறி.
யா/மா/4019 திரு.சந்திரசேகரம்பிள்ளைசுந்தரமூர்த்தி.
யா/மா/4030 திரு.சின்னத்தம்பி குணரத்தினம்.
யா/மா/4054 திருமதி. மரியம்மா சாமுவேல்.
யா/மா/4064 திரு. நாகமணி சுப்பிரமணியம்.
யா/மா/4076 திருமதி. பூமணி தம்பு.
யா/மா/4098 திருமதி.பரிமளம்குலசேகரம்பிள்ளை.
யா/மா/4105 திருமதி. தங்கம்மா விஜயரத்தினம்.
யா/மா/4217 திரு. சாமுவேல் டிக்சன்.
யா/மா/4222 திரு. கந்தையா தம்பித்துரை.
யா/மா/4230 திருமதி. சின்னையா நேசம்மா.
யா/மா/4301 திரு. இராமலிங்கம் நடேசு.
யா/மா/4302 திரு. கந்தையா ஐயாத்துரை.
யா/மா/4327 திருமதி. இராசம்மா தருமலிங்கம்.
யா/மா/4332 திரு. குமாரசாமி நர்த்தலிங்கம்.
யா/மா/4372 திரு.மோசஸ் செல்லத்துரை.
யா/மா/4410 திருமதி.அகத்தம்மாசவரிமுத்து.
யா/மா/4416 திரு.பொன்னையா சிவபாதசுந்தரம்.
யா/மா/4449 திருமதி. மேபிள் கெக்ரர்பிரான்சிஸ்.
யா/மா/4462 திரு.கனகசபை வல்லிபுரநாதன்.
யா/மா/4526 திரு.சதாசிவம் கனகசபாபதி.
யா/மா/ 4547 திரு.நடராஜா விவேகானந்தராஜா.
யா/மா/4550 திரு.விசுவலிங்கம் சபாரெத்தினம்.
யா/மா/4553 திருமதி. பரமேஸ்வரி கணேஸ்பரன்.
யா/மா/4582 திரு. சுப்பையா ஜம்புலிங்கம்.
யா/மா/4604 திருமதி. பூமணி வேலுப்பிள்ளை.
யா/மா/4623 திருமதி. மனோன்மணி இராசையா.
யா/மா/4626 திருமதி. ஞானம்மா சண்முகநாதன்.
யா/மா/4637 திரு. நாகமணி கணவதிப்பிள்ளை.
யா/மா/4642 திரு. பொன்னன் ஐயாத்துரை.
யா/மா/4648 திருமதி. சோதிப்பிள்ளை கந்தையா.
யா/மா/4654 திரு. கஸ்பானு எசக்கியேல்.
யா/மா/4658 திரு. சொலமென் அந்தோனிமுத்து.
யா/மா/4679 திரு. எலியாஸ் செபப்பிரகாசம்.
யா/மா/4693 திரு. பொன்னம்பலம் சரவணமுத்து.
யா/மா/4708 திருமதி.மனோண்மணிமகேந்திரநாதன்.
யா/மா/4773 திரு. பொன்னையா நவரத்தினம்.
யா/மா/4781 திருமதி. மனோன்மணி நாகலிங்கம்.
யா/மா/4792 திருமதி.திரவியம்சின்னையா.
யா/மா/4857 திருமதி.மேரிஇரத்தினம் சூசையப்புசெல்வம்.
யா/மா/4902 திருமதி.புண்ணியவதிகனகரத்தினம்.
யா/மா/4927 திருமதி. இராசம்மா இராசலிங்கம்.
யா/மா/4930 திரு.கணபதிப்பிள்ளை சண்முகம்.
யா/மா/4935 திருமதி. பிலோமினா செபமாலை.
யா/மா/4937 திரு.அம்பலவானர் பொன்னம்பலம்.
யா/மா/4948 திருமதி. கண்மணி நடராஜா.
யா/மா/4983 திருமதி. சின்னம்மா விஜயரத்தினம்.
யா/மா/4988 திரு. தம்பியப்பா அரியராஜா.
யா/மா/4991 திருமதி. புஞ்ஞவதி சொக்கலிங்கம்.
யா/மா/ 4994 திருமதி.அன்னபூரணம் தில்லையம்பலம்.
யா/மா/4998 திரு. நாகேசு சந்திரசேகரன்.
யா/மா/5006 திருமதி. பூமணி சுவாமிநாதன்.
யா/மா/5008 திரு. அந்தோனி சின்னத்துரை.
யா/மா/5037 திரு. சிவப்பிரகாசம் ஜோஜ்பேரின் பராஜசிங்கம்.
யா/மா/5048 திருமதி. பாக்கியம் கந்தசாமி.
யா/மா/5056 திரு. கந்தையா அருமைத்துரை.
யா/மா/5057 திருமதி. வள்ளிநாயகி மகேஸ்வரன்.
யா/மா/5078 திருமதி. பகவதி செல்வரட்ணம்.
யா/மா/5089 திரு. வெள்ளிவேலு பாக்கியநாதன்.
யா/மா/5111 திரு. கதிர்காமமுதலி தங்கவேல்.
யா/மா/5139 திருமதி.இரத்தினேஸ்வரிநவரத்தினம்.
யா/மா/5157 திரு. வேலுப்பிள்ளை சபாரட்ணம்.
யா/மா/5168 செல்வி. புவனேஸ்வரி சின்னத்துரை.
யா/மா/5208 திரு. கதிரவேலு தியாகராசா.
யா/மா/5214 திருமதி. கிருபைமணி தம்பிநாயகம்.
யா/மா/5223 திருமதி. கண்மணி நாகலிங்கம்.
யா/மா/5239 திரு. வேலுப்பிள்ளை முத்தையா.
யா/மா/5260 திரு. நமசிவாயம் இராசசிங்கம்.
யா/மா/ 5266 திரு. கந்தன் நல்லதம்பிவேதராஜா.
யா/மா/ 5365 திருமதி.பொன்னம்மாமுத்துக்குமாரு.
யா/மா/5388 திருமதி.மங்கையற்கரசிசெல்லத்துரை.
யா/மா/5394 திரு.கபிரியேற்பிள்ளைடொன்பொஸ்கோ.
யா/மா/5417 திருமதி. அர்ச்சில் யோசவ்.
யா/மா/5427 திருமதி.சகுந்தலாதேவிபாலசுப்பிரமணியம்
யா/மா/5430 திருமதி. சிசிலியா திருச்செல்வம்.
யா/மா/5445 திருமதி. செபமாலை எஸ்தாக்கி.
யா/மா/5464 திருமதி.தெய்வானைசெல்வநாயகம்.
யா/மா/ 5471 திரு.கந்தையா கனகசபாபதி.
யா/மா/ 5482 திருமதி. ஆச்சிமுத்து தருமலிங்கம்.
யா/மா/5486 திருமதி.மேரிஇமெல்டாஆரோக்கியநாதர்.
யா/மா/5514 திருமதி. மரியம்மா பாவிலுப்பிள்ளை.
யா/மா/5528 திருமதி. றீற்றா வேதநாயகம்.
யா/மா/5548 திருமதி.லூர்திமேரி செபஸ்திபத்திநாதர்.
யா/மா/5572 திருமதி.செல்வநாயகிமயில்வாகனம்.
யா/மா/5578 திரு.சவிரிஞானப்பிரகாசம்.
யா/மா/ 5597 திருமதி. தங்கம்மா தருமலிங்கம்.
யா/மா/5600 திரு.கணபதிப்பிள்ளை சுப்பிரமணியம்
யா/மா/5612 திரு.முருகேசு சண்முகவேல்.
யா/மா/5617 திரு. சுப்பையா இராசையா.
யா/மா/5654 திருமதி.மனோன்மணி செல்லத்துரை.
யா/மா/5689 திரு. நாகலிங்கம் ஐயம்பிள்ளை.
யா/மா/5707 திருமதி. முத்தம்மா சின்னத்துரை
யா/மா/5711 திருமதி.புவனேஸ்வரி சோமாஸ்கந்தன்.
யா/மா/5718 திருமதி. காசியம்மா அருணாசலம்.
யா/மா/5749 திரு.அப்பாத்துரை இராசரத்தினம்.
யா/மா/5765 திரு.சின்னையா சக்திவேல்.
யா/மா/5780 திருமதி.பராசக்தி பத்மநாதன்.
யா/மா/5804 திருமதி. பத்மாவதி சத்திரபாலன்.
யா/மா/5806 திரு. மரிசபின் மார்க்.
யா/மா/5841 திரு. வைரமுத்து துரைராஜா.
யா/மா/5842 திரு. தம்பிமுத்து சிவரத்தினம்.
யா/மா/5846 திருமதி. அரியமலர் விஸ்வநாதன்.
யா/மா/5862 திருமதி. வரதலெட்சுமி சிவகுரு.
யா/மா/5939 திருமதி. சம்பூரணம் கதிரித்தம்பி.
யா/மா/6040 திருமதி. மகேஸ்வரி சந்திரசேகரன்.
யா/மா/6135 திரு. கனகரட்ணம் காசிபதி.
யா/மா/6151 திருமதி. செல்லம்மா கந்தசாமி.
யா/மா/6157 திரு. இரத்தினம் கந்தசாமி.
யா/மா/6176 திரு. அகஸ்ரீன் அருளானந்தம்.
யா/மா/6194 திரு. கந்தையா கதிரேசு.
யா/மா/6218 திருமதி. இராசலட்சுமிபொன்னையா.
யா/மா/6229 திருமதி.யோகரத்தினம்கனகசபாபதி.
யா/மா/6262 திரு. தம்பிஐயா கந்தசாமி.
யா/மா/6275 திருமதி. கண்மணி இரத்தினவேல்.
யா/மா/6396 திருமதி.யோகேஸ்வரி சுப்பிரமணியம்.
யா/மா/6411 திரு. கந்தையா கனகலிங்கம்.
யா/மா/6476 திருமதி. சொர்ணம் பொன்னையா.
யா/மா/6508 திரு.கந்தசாமிகாசிநாதன்.
யா/மா/6512 திருமதி. சின்னமலர்திரேசா விக்ரர்.
யா/மா/6538 திரு.வைரமுத்து சிவஞானசுந்தரம்.
யா/மா/6545 திருமதி.இரட்ணதேவிவிவேகானந்தம்.
யா/மா/6551 திருமதி. இராசம்மா ஞானசேகரம்.
யா/மா/6649 திரு.வைத்திலிங்கம் ஞானத்துரை.
யா/மா/6666 திரு. தம்பிராசா கனகரத்தினராசா.
யா/மா/6693 திருமதி. யோகம்மா சின்னத்துரை.
யா/மா/6749 திருமதி.அன்னபூவதிகணபதிப்பிள்ளை.
யா/மா/6753 திரு.இராசா செல்வராஜா.
யா/மா/ 6754 திரு.முருகன் முத்தன்.
யா/மா/ 6786 திரு.நாகலிங்கம் சின்னத்துரை.
யா/மா/6812 திரு.வல்லியன் துரைசிங்கம்.
யா/மா/6836 திருமதி.நாகரத்தினம் விசுவரத்தினம்.
யா/மா/6915 திருமதி.கமலாம்பிகை செல்வநாயகம்.
யா/மா/6917 திரு. கனகரட்ணம் நடராசா.
யா/மா/ 6940 திரு. கந்தையா இராமநாதன்.
யா/மா/ 6956 திருமதி. இராசலட்சுமி வீரசிங்கம்.
யா/மா/6959 திரு. சபாபதி கணபதிப்பிள்ளை.
யா/மா/6964 திரு. முருகேசு செல்லத்துரை.
யா/மா/6983 திரு. விகரர் யோசேப்.
யா/மா/7028 திரு. நன்னியர் துரைசிங்கம்.
யா/மா/7030 திருமதி. செல்லம்மா பிலேந்திரன்.
யா/மா/7074 திரு. கார்த்திகேசு பொன்னையா.
யா/மா/7088 திரு. கணபதி நகுலேசன்.
யா/மா/7100 திரு. செல்லையா துரைராசா.
யா/மா/7104 திருமதி. தையலம்மா சின்னத்துரை.

**நல்லூர் உதவி அரச அதிபர் பிரிவு**

யா/ந/20 திரு. தம்புலோகநாதபிள்ளை.
யா/ந/44 திருமதி.சீத்தாலக்சுமிசுப்பிரமணியசிவம்.
யா/ந/68 திருமதி. விசாலாட்சி குகதாசன்.
யா/ந/93 திரு.கந்தப்பிள்ளை கோபாலசிங்கம்.
யா/ந/96 திரு.வைத்திலிங்கம்கோபாலகிருஷ்ணா.
யா/ந/104 திரு.பொன்னையாகனகலிங்கம்.
யா/ந/113 திரு. முருகேசு நவரத்தினராசா.
யா/ந/124 திரு. தியாகராசா பரமநாதன்.
யா/ந/141 திரு. முருகேசு சந்திரசேகரம்.
யா/ந/175 திருமதி. கண்மணி நல்லையா.
யா/ந/179 திரு. முருகன் கந்தையா.
யா/ந/201 திரு. கந்தையா சந்திரசேகரம்.
யா/ந/217 திருமதி. தவமணி கணேசமூர்த்தி.
யா/ந/272 திரு.மாணிக்கம் இரத்தினம்.
யா/ந/282 திரு.கனகமணி சிவலிங்கம்.
யா/ந/ 293 திரு.இராசையா சந்திரசேகரம்.
யா/ந/313 திரு.துரைராசா பாலசுந்தரம்.
யா/ந/315 திரு.சுப்பையாபிள்ளைபாலகிருஷ்ணன்.
யா/ந/325 திரு.அம்பலவாணர் கனகசபை.
யா/ந/357 திரு. பொன்னையா நல்லையா.
யா/ந/358 திருமதி. நாகம்மா சுப்பிரமணியம்.
யா/ந/370 திரு. சின்னையா பஞ்சலிங்கம்.
யா/ந/456 திரு.கனகரத்தினம்வேலாயுதபிள்ளை.
யா/ந/485 திரு. சோமசுந்தரம் கங்காதரன்.
யா/ந/505 திரு.ஐயாத்துரை பத்மநாதன்.
யா/ந/ 519 திரு.செல்வவிநாயகமூர்த்திசிவலிங்கம்.
யா/ந/528 திரு.பொன்னுத்துரை சண்முகராஜா.
யா/ந/549 திரு.இரத்தினசபாபதிஐயர்வெங்கடேசஐயர்.
யா/ந/585 திரு. வைத்திலிங்கம் நல்லையா.
யா/ந/639 திருமதி. புனிதவதி திருநாவுக்கரசு.
யா/ந/ 644 திரு. செல்லையா தில்லைநாதன்.
யா/ந/681 திரு. நாகலிங்கம் குணலிங்கம்.
யா/ந/697 திருமதி. கமலாம்பிகை பரமநாதன்.
யா/ந/698 திரு. கந்தையா குமாரசாமி.
யா/ந/703 திரு.பொன்னுத்துரை குமாரகுலசிங்கம்.
யா/ந/710 திருமதி. இராசலட்சுமிகுணரட்ணம்.
யா/ந/730 திரு. சிவசோதி முத்துக்குமாரு.
யா/ந/739 திருமதி. தைரியலட்சுமி நடராசா.
யா/ந/759 திரு. கணபதிப்பிள்ளை நவரத்தினம்.
யா/ந/766 திரு. இரத்தினசிங்கம் பத்மநாதன்
யா/ந/777 திருமதி. புவனேஸ்வரி மயிலானந்தன்.
யா/ந/797 திருமதி. இராஜேஸ்வரி நவரத்தினம்.
யா/ந/812 திரு. தம்பியப்பா சபாநாதன்.
யா/ந/833 திரு.பரமேஸ்வரக்குருக்கள் சோமாஸ் கந்தக்குருக்கள்.
யா/ந/834 திரு.தம்பு செல்லத்துரை.
யா/ந/870 திரு.துரையப்பா தியாகராசா.
யா/ந/879 திரு.கனகரெத்தினம்தெட்ஷணாமூர்த்தி.
யா/ந/933 திரு.கணபதிப்பிள்ளை குணசிங்கம்.
யா/ந/942 திரு. இராமலிங்கம் குமாரு.
யா/ந/945 திருமதி. விஜயராணி கந்தசாமி.
யா/ந/955திரு.செல்லையா கோடீசுவரன்.
யா/ந/965 திரு.முத்துக்குமாருலோகமாணியதிலகன்.
யா/ந/971 திரு.அப்பாக்குட்டி மகேந்திரன்.
யா/ந/ 975 திரு. மயில்வாகனம் முருகையா.
யா/ந/1039 திரு. பழனித்துரை சிவலிங்கம்.
யா/ந/1066 திரு. செல்வரத்தினம் சிவன்தாசன்.
யா/ந/1096 திரு. இராஜரட்ணம் திருச்செல்வம்.
யா/ந/1131 திருமதி. பகவதி சண்முகராஜா.
யா/ந/1139 திருமதி. இராமநாதன் ஞானம்பிகை.
யா/ந/1148 திருமதி. இராசமணி கனகசிங்கம்.
யா/ந/1189 திரு. பழனி மார்க்கண்டு.

(தொடரும்...)

## தமிழீழ நிர்வாக சேவை-தமிழீழம்

# காணி பற்றிய முக்கிய அறிவித்தல்

1. காடுகள், பற்றைக்காடுகள் அழிப்பது முற்றாகத் தடைசெய்யப்பட்டுள்ளது.
2. நீண்ட காலம் பராமரிப்பின்றிபற்றைக் காடாக வளர்ந்துள்ள உறுதிப் படுத்தப்பட்ட காணிக்கான ஆவணமுள்ள உரிமையாளர் பற்றைக் காட்டினை வெட்டி காணியை அபிவிருத்தி செய்யவேண்டிய தேவை ஏற்பட்டிருப்பின் மாவட்ட தமிழீழ நிர்வாக சேவையினரின் எழுத்து மூலமான முன்னனுமதி பெற்ற பின்பே பற்றைக்காட்டினை வெட்டுதல் வேண்டும்.
3. அனுமதி பெறாது பற்றைக்காடுகளை வெட்டி அழிப்பது தண்டனைக்குரிய குற்றமாகும். அனுமதி பெறாது பற்றைக்காடுகளை வெட்டி அழிப்போர் மீது தமிழீழ காவல்துறை மூலம் நடவடிக்கை எடுக்கப்படும்.
4. காணிகள் அரசினால் வழங்கப்பட்டபோது எத்தேவைக்கென வழங்கப்பட்டதோ அத்தேவைக்கு மட்டுமே காணி பயன்படுத்தப்படல் வேண்டும். வழங்கப்பட்ட காணியை பிற தேவைக்கு பயன்படுத்த முனைவதும், விற்பனை செய்வதும் தண்டனைக்குரிய குற்றமாகும். எனினும் குறித்த காணி பிற தேவைக்கும் விற்பனைக்கும் உட்படுத்தப்படவேண்டிய அவசியம் ஏற்படின் அக்காணி சம்பந்தமாக மாவட்ட தமிழீழ நிர்வாக சேவை, காணிப்பகுதியுடன் நேரில் தொடர்புகொண்டு எழுத்து மூலமான முன் அனுமதி பெற்ற பின்பே காணியைப் பிற தேவைக்கு பயன்படுத்த முடியும்.
5. திட்டங்களுக்கு அரசினால் வழங்கப்பட்ட காணிகள் காணி உரிமை யாளர்களினால் நீண்ட காலம் பயன்படுத்தப்படாதிருந்தமையினால், அக்காணிகளை அவரது உறவினர்கள், உறவினர் அல்லாதோர் ஆட்சிப்படுத்தி வருகின்றனர். இப்படிப்பட்ட காணிகளை ஆட்சிப்படுத்தி வைத்திருப்போர் அக்காணியினை விற்பனை செய்வது தண்டனைக்குரிய குற்றமாகும். இப்படிப்பட்ட காணியினை யாராவது விற்பனை செய்திருப்பின் அக்காணி மீள சுவீகரிக்கப்படும் இதற்கு நட்டஈடு எதுவும் வழங்கப்படமாட்டாது.
6. 5இல் காட்டப்பட்டுள்ள காணி தொடர்பில் யாராவது நீண்ட காலம்/குறுகிய காலம் ஆட்சிப்படுத்தி வைத்திருப்பின் அக்காணி தொடர்பான விபரங்களுடன் மாவட்ட தமிழீழ நிர்வாக சேவையுடன் தாமதமின்றித் தொடர்புகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.
7. வெளிநாட்டில் வாழ்பவர்களின் காணிகளை ஆட்சிப்படுத்தி வைத்திருப்போர் அக்காணி தொடர்பான விபரங்களுடன் மாவட்ட தமிழீழ நிர்வாக சேவை செயலகத்துடன் தாமதமின்றி தொடர்புகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.
8. குடியிருப்பதற்குக் காணி இல்லாத குடும்பங்கள் தமக்கு காணி எதுவும் இல்லை என்ற கிராம அலுவலர், அக்கிராம முன்னேற்ற சங்கம் ஆகியோரின் உறுதிப்பாட்டுக் கடிதத்துடன் மாவட்ட தமிழீழ நிர்வாக சேவை செயலகத்துடன் தொடர்புகொண்டு குடியிருப்பிற்கான காணியை பெற்றுக்கொள்ள முடியும்.
9. இருந்த காணியை விற்றவர்கள், பிற மாவட்டத்தில், பிற கிராம அலுவலர் பிரிவில் காணி உள்ளவர்கள் நிரந்தரமான குடியிருப்புக் காணிக்கு விண்ணப்பிக்க முடியாது. நிரந்தர குடியிருப்புக்காணி பெற்றவர் அக் காணியை எக்காரணம் கொண்டும் விற்பனை செய்ய முடியாது. அப்படியான காணியை எவராவது விலைக்கு வாங்கு பவர்களாயின் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும்.

தமிழீழ நிர்வாக சேவை,
நடுவப்பணியகம்,
155, பாரதிபுரம்,
கிளிநொச்சி.

(சி-13107)

Norwegian People's Aid
ASB Arbeiter-Samariter-Bund Deutschland e.V.
Swiss Labour Assistance SAH
solidar
An INGO consortium including NPA, SAH and ASB

# கூறுவிலை கோரல்

செம்பியன் பற்று வடக்கிலேயோ அல்லது வத்திராயனிலேயோ (வடமராட்சி கிழக்கு) சுனாமியால் அழிக்கப்பட்ட வீடுகளை மீளப் புனரமைத்தல்.

ஏ.எஸ்.பீ., என்.பீ.ஏ மற்றும் எஸ்.ஏ.எச். ஆகிய சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்களின் ஒன்றியமாகிய சொலிடாரினால் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு செம்பியன்பற்று வடக்கிலும், வத்திராயனிலும் சேதமாக்கப்பட்ட வீடுகளை மீண்டும் புனரமைப்பதற்காக சீல் வைக்கப்பட்ட கூறு விலைப்பத்திரங்களைச் சமர்ப்பிக்குமாறு கோரப்படுகின்றீர்கள். பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்கள் 20 தொடக்கம் 50 வீடுகள் தத்தமது தராதரத்திற்கும் தகுதிக்கும் ஏற்றவாறு கட்டவிரும்புவோரை இதில் பங்களிக்குமாறு கேட்டுக்கொள் கின்றோம். ஒப்பந்தக்காரர்கள் கூறுவிலைப்பத்திரங்களையும் சம்பந்தப்பட்ட ஆவணங் களையும் கீழ் காணும் முகவரியில் ரூபா 3000/= செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.

மேற்படி கூறு விலை விண்ணப்பப்படிவங்களும், ஆவணங்களும் 26.10.2005ஆம் திகதிக்கு முன் பெற்றுக் கொள்ளல் வேண்டும்.

Solidar/ ASB Construction Office,
160 Mile Post,
Farm Point,
A9 Road,
Paranthan.

தொலைபேசி – 021 228 5147

(சி-13103)

# விசேட பொதுக்கூட்டம்

மாதகல் துறைமுக விநாயகர் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தின் விசேட பொதுக் கூட்டம் எதிர்வரும் 27.10.2005 வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு சங்க அலுவலகத்தில் நடைபெற வுள்ளது. எமது சகல அங்கத்தவர்களும் இக்கூட்டத் தில் தவறாது கலந்துகொள்ளுமாறு வேண்டுகின் றோம்.

மாதகல் துறைமுக விநாயகர்
கடற்றொழிலாளர் சங்கம்
தலைவர்,
திரு.ஆ. சிவஅன்பு

(சி.13112)

***சலுகை விலையில்***

**யாழ்-கொழும்பு விமானக் கட்டணம்.**

***சலுகை விலையில்***

**கொழும்பு-சென்னை விமானக் கட்டணம்.**

*லண்டனுக்கு 1 kg மிற்கு பார்சல் 600 ரூபா*

தொடர்புகொள்ள வேண்டிய முகவரி
MANOJ AIR TOURS PVT LTD
32, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.
021-2223916

(சி.13111)

# கண்ணீர் அஞ்சலி

திருமதி
## ஞானசேகரம் லட்சுமி

எமது பாடசாலையின் ஆசிரியர் திரு. க. கரு ணானந்தன் அவர்களின் மாமியாரான திருமதி ஞானசேகரம் லட்சுமி அவர்கள் இறைபதம் அடைந்தமையையிட்டு துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அவரது ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கின்றோம்.

சாந்தி! சாந்தி!சாந்தி!

அதிபர்,ஆசிரியர்கள், மாணவர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள்,
கிளி/புனித அந்தோனியார் றோ.க. வித்தியாலயம்,
முரசுமோட்டை.

(6882)

# 05 ஆம் ஆண்டு நினைவலைகள்

தாயின் மடியில் 13 – 04 – 1980



தாயகமண்ணில் 25 – 09 – 2000

தலைமைக்காவலர்
## சுதர்சன்
சின்ராசா சுதர்சன்
இரணைமடு, கிளிநொச்சி

இத்தாவில், முகமாலையில் முன்னரங்க நிலையில் ஏற்பட்ட எதிர்பாராத வெடி விபத்தின் போது 25.09.2005 அன்று வீரச்சாவடைந்தார்.

*அதர்மம் தலை தூக்கி ஆடியபோதிலே–தமிழன்*
*தர்மம் தாங்கி ஒரு வேள்வி நடாத்தினான்.*
*நிதர்சனம் போலவே அண்ணன் காட்டிய திசையினில் பணியில்*
*சுதர்சனும் கூடவே தீயினில் கலந்தான்*
*குதர்க்கம் செய்திடும் குவலயம் எதிர்க்கட்டும்–நண்பனே*
*எதற்கும் அஞ்சிடோம் தமிழ் ஈழம் படை:;போம்–இது உறுதி*

(6817)

*தமிழீழ காவல்துறையினர்*

## நிகொட்-முல்லைத்தீவு
## அமைய தரவு நிரற்படுத்துநர் (Data Entry Operator)
## பதவிக்கான வெற்றிடம்

மேற்படி வெற்றிடத்திற்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது. விண்ணப்பங்கள் சுயவிபரத்துடன் (BIO DATA) " அரச அதிபர், கச்சேரி, முல்லைத்தீவு" என்ற விலாசத்திற்கு 2005.11.11 ஆம் திகதிக்கு முன்பு கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைக்கப்படல் வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "நிகொட் அமைய தரவு நிரற்படுத்துநர் பதவி" எனக் குறிப்பிடப்படல் வேண்டும்.

**தகைமைகள்**

1. முல்லைத்தீவு மாவட்ட நிரந்தர வாசியாக இருத்தல் வேண்டும்.
2. 18 வயதுக்கு மேற்பட்டவராக 45 வயதுக்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும்.
3. பின்வரும் தகைமைகள் உடையவராக இருத்தல் வேண்டும்.

அ (1) க.பொ.த. (சா/த) பரீட்சையில் தமிழ் மொழி, கணிதத்துடன் நான்கு பாடங்களில் திறமைச்சித்தியுடன் ஆங்கிலம் உட்பட ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

அல்லது

(11) க.பொ.த. (உ/த) பரீட்சையில் புதிய பாடத்திட்டத்தின் கீழ் இரண்டு பாடங்களில் சித்தி அல்லது பழைய பாடத்திட்டத்தின் கீழ் 3 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

ஆ மேல் குறிப்பிட்ட தகைமைகளுடன், அங்கீகரிக்கப்பட்ட தபானம் ஒன்றில் பின்வரும் பகுதிகளில் கணனிப் பயிற்சி பெற்றதற்கான சான்றிதழ் இருத்தல் வேண்டும்.


1. Windows Operating Systems
2. Microsoft Word
3. Microsoft Excel
4. Microsoft Access

கச்சேரி,
முல்லைத்தீவு,
24.10.2005.

(சி.13114)

திருமதி .இமெல்டா சுகுமார்,
அரசஅதிபர்,
முல்லைத்தீவு மாவட்டம்.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



## டினுசியன்

கிளி/ முருகானந்தா மகாவித்தியாலயத்தைச் சேர்ந்த செல்வன் விக்னேஸ்வரன் டினுசியன் 2005 ஆம் ஆண்டு 5 ஆம் தர புலமைப் பரிசில் பரீட்சையில் 145 புள்ளிகளைப் பெற்று மாவட்டத்தில் எட்டாம் இடத்தைப் பெற்றமைக்கு அவரைப் பாராட்டுவதுடன் அவர் சித்தி பெற வழிகாட்டிய அதிபர், ஆசிரியர்களுக்கு நன்றிகளையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக்கொள்கின்றோம்


வாழ்த்துவோர்,
குடும்பத்தார்,
கோரக்கன் கட்டு,
பரந்தன்.

(6883)

## அந்தியேட்டி வீட்டுக்கிரியை அழைப்பிதழ்

*26.09.2005 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர்*

### திரு. காசிப்பிள்ளை விநாயகமூர்த்தி



அவர்களின் இறுதிச் சடங்கில் கலந்து கொண்டும் தங்கள் அனுதாபத்தை தொலைபேசி மூலம் தெரிவித்த அனைவர்க்கும் எமது நன்றியைத் தெரிவீத்துக் கொள்கின்றோம்.

எதிர்வரும் 26.10.2005 புதன்கிழமை அன்று அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திக் கிரியையிலும், மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம். தனிப்பட்ட அழைப்பிதழ்கள் கிடைக்கப் பெறாதவர்களும் இவ் அழைப்பிதழை ஏற்றுக் கொண்டு வருகைதருமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

குடும்பத்தினர்

*இல:46, கட்சன்வீதி,*
*வட்டக்கச்சி,*
*கிளிநொச்சி.*
*தொலை. இல 0212285798*
*0602212432*

(6879)

## வட.இ.ச.சபைப் பரீட்சைகள்-2006

வட.இ.ச.சபையின் 2006 ஆம் ஆண்டிற்கான விண்ணப்பப்படி வங் கள் 20.10.2005 முதல் விற்பனைக்கு வரும். விண்ணப்ப முடிவுத் திகதி 21.12.2005. விண்ணப்பப்படிவம் ஒன்றின் விலை அறிவுறுத்தல் பிரதியுடன் ரூபாமுப்பது 30/= மட்டும். விண்ணப்பப் படிவத்தை தபால் மூலம் பெற விரும்புவோர் ரூபா 30/= பெறுமதியான காசுக்கட்டளை (மணி ஓடர்) உடன் 5.00/= ரூபா பெறுமதியான தபால் தலை ஒட்டிய சொந்த முகவரி எழுதப்பட்ட நீள் (10 செ.மீ, 22 செ.மீ) கடித உறையை வட. இ.ச.சபைக் காரியாலயத்திற்கு அனுப்பி பெற்றுக்கொள்ளலாம்.

வெளிமாவட்டத் தேர்வு நாடிகள் கீழ் குறிப்பிடப்படும் இடங்களில் வீண்ணப்பப்படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

01.கொழும்பு
திருமதி.சி.தவமணிதாசன்,
(ஆசிரியர்),
வீவேகானந்தா மகாவித்தியாலயம்,
புதுச்செட்டித்தெரு,
கொழும்பு -13,
தொ.இல.012 - 431120
இல்லம் - 012 - 364548

02.கண்டி
திருமதி.வை.செல்வரத்தினம்,
(ஆசிரியர்),
கண்டி உயர்தரப் பாடசாலை,
கண்டி.

03.திருகோணமலை
திருமதி. தே.முருகுப்பீள்ளை,
இளைப்பாறிய பீரதிக்கல்வீப் பணிப்பாளர்,
22,ஸ்பெல்ட்வீன் வீதி,உவர்மலை,
திருகோணமலை.
தொ.இல - 066 - 2220356

04) மட்டக்களப்பு.
செல்வீ ற. நடராசா
உதவீக்கல்வீப்பணிப்பாளர்
(சங்கீதம்)
வலயக்கல்வீ அலுவலகம்,
மட்டக்களப்பு.

05. கல்முனை
திருமதி த.வீசுவநாதன்,
ஆசிரிய ஆலோசகர், (சங்கீதம்),
கல்முனைக் கல்வீ வலயம்,
கல்முனை.

06.வவுனியா
செல்வீ.சு.கந்தையா,
உதவீக்கல்வீப்பணிப்பாளர்
(சங்கீதம்),
வலயக் கல்வீ அலுவலகம்,
வவுனியா.
தொ.இல - 024 - 2222373

07) முல்லைத்தீவு
திரு.ப. அரியரத்தினம்
வலயக்கல்வீப்பணிப்பாளர்,
வலயக்கல்வீ அலுவலகம்,
முல்லைத்தீவு.

08.கிளிநொச்சி
திரு. எஸ். குருகுலராஜா,
வலயக்கல்வீப்பணிப்பாளர்,
வலயக்கல்வீ அலுவலகம்,
கிளிநொச்சி

09.மன்னார்,
கல்வீப்பணிப்பாளர்,
வலயக் கல்வீ அலுவலகம்,
மன்னார்,

10) பண்டாரவளை
திருமதி ஷா. இராமநாதன்,
மலையகத்தின் இந்திய நுண்கலைப்பீடம்
பண்டாரவளை

(சி.13113)


## திருநெல்வேலியில் ஓர் புதிய உதயம்





பூமியில் புதிதாக கால்பதிக்கும் உங்கள் குழந்தையை வரவேற்க....

குழந்தைகளுக்கான
* பால்மா வகைகள்
* உடைகள்
* விளையாட்டுப்பொருட்கள்

உட்பட உங்கள் குழந்தைகளுக்குத் தேவையான அனைத்தையும் மற்றும் தாய்மாருக்கான பொருட்களையும் ஒரேகூரையின் கீழ் அதிசயிக்கத்தக்க மலிவு விலையில் பெற்றுக்கொள்ள நம்பிக்கையான ஸ்தாபனம்.

**Mother And Baby Care**

**108/I,palaly Road, Thirunelvely.T.P:0717556677**

(சி-13097)

# நவம் அறிவுக்கூட கல்லூரி அணி சுட்டா கிண்ணத்தைக் கைப்பற்றியது!


சம்பியன் கிண்ணத்தைப் பெறும் அணித் தலைவர்

லெப். கேணல் சுட்டா வெற்றிக் கிண்ணத்தை லெப். கேணல் நவம் அறிவுக் கூட கல்லூரி அணி கைப்பற்றியுள்ளது.

நவம் அறிவுக் கூடத்தினரினால் நடாத்தப்பட்டு வந்த லெப். கேணல் சுட்டா ஞாபகார்த்தமாக மென்பந்து துடுப்பாட்ட இறுதிப் போட்டியில் நேற்று என்.ஈ.சி. அணியை 19 ஓட்டங்களினால் தோற்கடித்து நவம் அறிவுக் கூட் கல்லூரி அணி சம்பியனாகியது.

நவம் அறிவுக்கூட மைதானத்தில் நடைபெற்றுவந்த இப்போட்டித் தொடரின் அரையிறுதிப் போட்டிகள் முன்னர் நடைபெற்றன.

முதலாவதாக நடைபெற்ற அரையிறுதிப் போட்டியில் இளந்தென்றல் அணியும், என்.ஈ.சி அணியும் மோதின. இதில் முதலில் ஆடிய இளந்தென்றல் அணி நிர்ணயிக்கப்பட்ட ஓவரில் ஒன்பது விக்கெட்டுக்களை இழந்து 63 ஓட்டங்களைப் பெற்றது. இதில் குணேந்திரன் 23 ஓட்டங்களைப் பெற்றார். பந்து வீச்சில் கிருசாந்தன், குமணன் தலா இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு 64 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய என்.ஈ.சி. அணி அபாரமாக ஆடி 10.3 ஓவர்கள் நிறைவில் ஒன்பது விக்கெட்டுக்களினால் வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்குத் தெரிவானது. துடுப்பாட்டத்தில் கிரு சாந்தன் 23 ஓட்டங்களை ஆட்டமிழக்காது பெற்றார்.

அடுத்து நடைபெற்ற அரையிறுதிப் போட்டியில் கடற்புலிகள் அணியும், நவம் அறிவுக்கூட கல்லூரி அணியும் மோதின. மிகவும் விறுவிறுப்பாக நடைபெற்ற இப் போட்டியில் நவம் அறிவுக் கூட கல்லூரி 14 ஓட்டங்களினால் வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்குத் தெரிவானது.

இதில் முதலில் ஆடிய நவம் அறிவுக் கூட கல்லூரி அணி 13 ஓவர்கள் முடிவில் 57 ஓட்டங்களைப் பெற்று அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்தது. இதில் தர்சன் 32 ஓட்டங்களைப் பெற்றார். பந்து வீச்சில் சாம்ராஜ் மூன்று விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு வெற்றியிலக்கு நோக்கி ஆடிய கடற்புலிகள் அணி 14 ஓவர்கள் முடிவில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 43 ஓட்டங்களைப் பெற்றது. துடுப்பாட்டத்தில் எவரும் இரட்டை இழக்க ஓட்டத்தைப் பெறவில்லை. பந்து வீச்சில் குட்டிமோகன் நான்கு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

இதனைத் தொடர்ந்து இப்போட்டித் தொடரின் இறுதிப் போட்டி நவம் அறிவுக்கூட கல்லூரி அணிக்கும் என்.ஈ.சி. அணிக்கும் இடையில் நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் ஆடிய நவம் அறிவுக்கூட கல்லூரி அணி தர்சனின் அதிரடித் துடுப்பாட்டத்தின் மூலம் நிர்ணயிக்கப்பட்ட ஓவரின் ஐந்து விக்கெட்டுக்களை இழந்து 104 ஓட்டங்களைப் பெற்றது. இதில் தர்சன் மிகவும் சிறப்பாகத் துடுப்பெடுத்தாடி ஏழு ஆறு ஓட்டம், இரண்டு நான்கு ஓட்டம் அடங்கலாக 55 ஓட்டங்களைப் பெற்றார். மற்றும் புலிமகன் 22 ஓட்டங்களைப் பெற்றார். பந்து வீச்சில் குமணன் இரண்டு விக்கெட்டைக் கைப்பற்றினார்.

பதிலுக்கு வெற்றியிலக்கு நோக்கி ஆடிய என்.ஈ.சி. அணி 14.3 ஓவர்கள் முடிவில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 85 ஓட்டங்களைப் பெற்று தோல்வியைத் தழுவியது.. இதில் திவாகர் 24 ஓட்டங்களைப் பெற்றார். பந்து வீச்சில் நீதன் நான்கு விக்கெட்டுக்களையும், குட்டிமோகன், தர்சன் தலா இரண்டு விக்கெட்டுக்களையும் கைப் பற்றினர்.

இப்போட்டித் தொடரின் சிறந்த துடுப்பாட்ட வீராக தர்சனும், சிறந்த பந்து வீச்சாளராக நீதனும் தெரிவானார்கள்.

இப்போட்டிக்கு நடுவர்களாக சுபானந், லெனின் ஆகியோர் கடமையாற்றினர்.

இதனைத் தொடர்ந்து தனஞ்சயன் தலைமையில் பரிசளிப்பு நிகழ்வு இடம் பெற்றது. முன்னதாக நினைவுரை நடைபெற்றது. இதில் லெப். கேணல் சுட்டா குறித்த நினைவுரையினை அறிவழகனும், சிறப்புரையினை தமிழீழ விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் கி. பாப்பாவும் நிகழ்த்தினர். இதன் பின் பரிசளிப்பு வைபவம் நடைபெற்றது.. பரிசில்களை கி. பாப்பா வழங்கிக் கௌரவித்தார்.


தொடரின் சிறந்த துடுப்பாட்ட வீரராக தெரிவான தர்சன்


தொடரின் சிறந்த பந்துவீச்சாளராக தெரிவான் நீதன்

## யாழ். கோட்ட மட்ட உதைபந்தாட்ட இறுதிப்போட்டி முடிவுகள்

தெல்லிப்பழைகல்விக் கோட்டப்பாடசாலை அணிகளுக்கு இடையே இடம்பெற்ற உதைப் பந்தாட்டஇறுதிப்போட்டிகளில் தெல்லிப்பழை மகாஜனாக்கல்லூரியும் அளவெட்டி அருணோதயா கல்லூரியும் வெற்றி பெற்றுள்ளன.

14வயதுப்பிரிவில் அளவெட்டி அருணோதயாக் கல்லூரியும் மகாஜனாக்கல்லூரியும் மோதிக்கொண்டதில் அருணோதயாக்கல்லூரி நான்கிற்கு மூன்று என்ற சமநிலை உடைப்பு உதைகள் மூலம் வெற்றி பெற்று சம்பியனாக தெரிவு செய்யப்பட்டது.

16வயதுப்பிரிவில் அளவெட்டி அருணோதயா கல்லூரியும் மகாஜனாக்கல்லூரியும் மோதிக் கொண்டதில் ஆட்டம் சமநிலையில் முடிவுற்றது அதனைத்தொடர்ந்து அளவெட்டி அருணோதயாக் கல்லூரி பூவா தலையா போட்டதில் வெற்றிபெற்றதைத்தொடர்ந்து சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டது.

18வயதுப்பிரிவில் தெல்லிப்பழை மகாஜனா கல்லூரிக்கும் யூனியன்கல்லூரிக்கும் இடையிலான போட்டி மழை காரணமாக இடம்பெறவில்லை. இதற்குப்பதிலாக பூவா, தலையா போட்டு மகாஜனாக்கல்லூரி சம்பியனாக அறிவிக்கப்பட்டதுடன் கூட்டு சம்பியனாகவும் அறிவிக்கப்பட்டன. (41)

□□ □□

சண்டிலிப்பாய் கல்விக் கோட்டப்பாடசாலை அணிகளுக்கு இடைய்யான உதை பந்தாட்ட இறுதிப்போட்டிகளில் 14,18 வயதுப் பிரிவினருக்குரிய போட்டிகளில் இளவாலை புனித கென்றியரசர் கல்லூரி அணியும் 16 வயதுப் பிரிவுப் போட்டியில் ஆனைக்கோட்டை றோமன் கத்தோலிக்கப்பாடசாலை அணியும் வெற்றிபெற்றுள்ளன.

14வயதுப்பிரிவில் இளவாலை கென்றியரசர் கல்லூரியும் மானிப்பாய் இந்துக்கல்லூரியும் மோதியதில் ஆட்டம் முடிவடைந்த போது இரு அணிகளும் சம நிலையில் கோல்கள் பெறாது காணப்பட்டன.

சமநிலை உடைப்பு தண்டனை உதைகள் எட்டு வழங்கப்பட்டபோதிலும் மூன்று என்ற சமநிலையில் காணப்பட்டன. ஒன்பதாவது தண்டனை உதையை புனித கென்றியரசர் கல்லூரி உதைத்து 4-3 என்ற கோல்கணக்கில் புனித கென்றி சம்பியனாக தெரிவு செய்யப்பட்டன.

16வயதுப்பிரிவில் ஆனைக்கோட்டை றோமன் கத்தோலிக்க பாடசாலையும் மாதகல் புனித ஜோசப் வித்தியாலயமும் மோதிக்கொண்டன.

ஆட்டம் சமநிலையில் முடிவடைந்ததைத் தொடர்ந்து வழங்கப்பட்ட சமநிலை உடைப்பு உதைகளைத்தொடர்ந்து ஆனைக்கோட்டை றோமன்கத்தோலிக்க பாடசாலை 3:2 என்ற கோல்கணக்கில் வெற்றி பெற்று சம்பியனாக தெரிவு செய்யப்பட்டது.

18வயதுப்பிரிவில் இளவாலை புனித கென்றியரசர் கல்லூரியும் மானிப்பாய் இந்துக் கல்லூரியும் மோதிக்கொண்டதில் புனித கென்றியரசர்கல்லூரி இரண்டு கோல்களைப்பெற்று மானிப்பாய் இந்துக்கல்லூரியை வெற்றி கொண்டு சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

போட்டிகள் இளவாலை புனித கென்றியரசர் கல்லூரி மைதானத்தில் இடம் பெற்றது. (41)

□□ □□

சங்கானைகல்விக்கோட்டப்பாடசாலை அணிகளுக்கு இடையே இடம்பெற்ற உதை பந்தாட்ட இறுதிப்போட்டியில் 14,16, 18வயதுப் பிரிவுகளில் முறையே அராலி இந்துக் கல்லூரி,வட்டுக்கோட்டை மத்தியகல்லூரி, சுழிபுரம் விக்ரோறியாக்கல்லூரி வெற்றி பெற்று சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

14வயதுப்பிரிவில் அராலி இந்துக்கல்லூரியும் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக்கல்லூரியும் மோதிக்கொண்டன. இதில் அராலி இந்துக்கல்லூரி 2:0 என்ற கோல்கணக்கில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக்கல்லூரியை வெற்றி கொண்டு சம்பியனாக தெரிவு செய்யப் பட்டுள்ளது.

16வயதுப்பிரிவில் அராலி இந்துக்கல்லூரியும் வட்டுக்கோட்டை மத்திய கல்லூரியும் மோதிக்கொண்டதில் வட்டுக்கோட்டை மத்திய கல்லூரி அராலி இந்துக்கல்லூரியை 1:0 என்ற கோல்கணக்கில் வெற்றி பெற்று சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டது

18வயதுப்பிரிவில் சுழிபுரம் விக்ரோரியாக் கல்லூரியும் வட்டுக்கோட்டை இந்துக்கல்லூரியும் மோதிக்கொண்டதில் விக்ரோரியாக்கல்லூரி2:0 என்ற கோல்கணக்கில் வெற்றி பெற்று சம்பியனாக தெரிவு செய்யப்பட்டன வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக்கல்லூரி மைதானத்தில் போட்டிகள் இடம்பெற்றன. (41) .

### மட்ரிட் மாஸ்டர்ஸ் டென்னிஸ்

## இறுதிப் போட்டியில் லியாண்டர் ஜோடி தோல்வி!




மட்ரிட் மாஸ்டர்ஸ் டென்னிஸ் இறுதிப் போட்டியில்லியாண்டர்பயஸ்ஜோடி தோல்வியடைந்துள்ளது.


மட்ரிட் மாஸ்டர்ஸ் டென்னிஸ் போட்டியின் இரட்டையர் பிரிவு இறுதி ஆட்டத்தில் லியாண்டர் பயஸ்-ஜோடி தோல்வி அடைந்தது.

மாஸ்டர்ஸ் டென்னிஸ் ஸ்பெயின் மட்ரிட் நகரில் நடந்த மாஸ்டர்ஸ் டென்னிஸ் போட்டி இரட்டையர் பிரிவு இறுதி ஆட்டத்தில் இந்தியாவின் லியாண்டர் பயஸ்- ஜிமோன் சிச் (சேர்பியா) ஜோடி நோலெஸ்(பக்ரைன்)- நெஸ்டர் (கனடா) ஜோடியை எதிர்த்து ஆடியது.

ஆட்டத்தின் தொடக்கத்தில் சிறப்பாக ஆடிய லியாண்டர் பயஸ் ஜோடி முதல் செட்டை எளிதாக கைப்பற்றியது. முதல் செட்டை கோட்டை விட்டதால் அடுத்த செட்டில் நோலெஸ் ஜோடி சுதாகரித்துக் கொண்டு ஆடியது. இதன் பயனாக நோலெஸ் ஜோடி இரண்டாவது செட்டை தனதாக்கிக் கொண்டது. முதல் செட்டைப்போல் மூன்றாவது செட்டிலும் பயஸ் ஜோடி சிறப்பாக ஆடி சம்பியன் பட்டத்தை கைப்பற்றும் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் எதிர்பார்ப்புக்கு மாறாக மூன்றாவது செட்டை எந்த விதமான சிரமமும் இன்றி நோலெஸ் ஜோடி கைப்பற்றியது. இதில் லியாண்டர் பயஸ் ஜோடி 3-6, 6-3, 6-2 என்ற செட் கணக்கில் தோல்வி அடைந்தது. வெற்றி பெற்ற நோலெஸ் ஜோடி சம்பியன் பட்டத்தை தட்டிச்சென்றது.

## முதலாவது ஒரு நாள் போட்டியில் நியூசிலாந்து தெ.ஆபிரிக்காவிடம் தோற்றது!

தென்னாபிரிக்க நியூசிலாந்து அணிகள் பங்குபற்றும் ஐந்து ஒருநாள் கிரிகெட் போட்டிகளைக் கொண்ட தொடரின் முதலாவது போட்டியில் தென்னாபிரிக்க அணி இரண்டு விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றுள்ளது. தென்னாபிரிக்காவின் புளும் போண்டின் நகரில் நடைபெற்ற இப்போட்டியில் நாணயச் சுழச்சியில் வென்ற நியூசிலாந்து அணி முதலில் துடுப்பெடுத்தாடியது. அவ்வணியின் நதன் ஆஸ்லே முதலில் ஒரு ஓட்டத்துடன் ஆட்டமிழந்தார்.




அடுத்து வந்த வின்சன்ட் எட்டு ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். எனினும் சிறப்பாக ஆடிய அணித்தலைவர் பிளமிங் 45 ஓட்டங்களுடன் ஆட்மிழந்தார்.எனினும் ஐந்தாவது விக்கெட் இணையான மக்மிலன், ஓரம் இருவரும் சிறப்பாக ஆடி அணியின் எண்ணிக்கையை 172 ஓட்டங்கள் வரை இட்டுச் சென்றனர். எனினும் கரிஸ் இந்த இணையைப் பிரித்ததும் மக்கலம், அடம்ஸ் இருவரும் அணியின் எண்ணிக்கையை 50 ஓவர் முடிவில் 249 வரை கொண்டு முடித்தனர்.

மக்மிலன் 66,பிளமிங் 45, ஓரம்35,அடம்ஸ் 30 மக்மிலன் 28என ஓட்டங்களைப் பெற்றனர்.

பந்து வீச்சில் தென்னாபிரிக்காவின் அன்றுநெல் மூன்று, கரிஸ் இரண்டு விக்கெட்டுகளை வீழ்த்தினர். பதிலுக்கு 250 என்ற வெற்றியிலக்குடன் ஆடிய தென்னாபிரிக்கா, ஜஸ்ரின் கெம் எடுத்த 73 ஓட்டங்களின் உதவியுடன் வெற்றி பெற்றது.அணித்தலைவர் ஸ்மித் 19,பொலக் 37,கிப்ஸ் 25, பிரின்ஸ் 31,பௌச்சர் 33, டிப்னார் பத்து என ஓட்டங்களைப் பெற்றனர். கலிஸ் ஓட்டங்களைப்பெறாது ஆட்டமிழந்தார். நியூசிலாந்து சார்பில் பந்து வீசிய ஷேன் பொண்ட், பட்டேல் தலா இரு விக்கெட்டுகளையும், மிஸ், ஆஸ்லே,அடம்ஸ்,விட்டோரி ஆகியோர் ஒவ்வொரு விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

### முதலாவது ஒரு நாள் போட்டி இன்று





இந்தியா சுற்றுலாவை மேற்கொண்டுள்ள சிறிலங்கா அணிக்கும் இந்தியா அணிக்கும் இடையிலான முலாவது ஒரு நாள் சர்வதேசப் போட்டி இன்று நாக்பூர் மைதானத்தில் நடைபெறவுள்ளது.

ஏழு ஒரு நாள் போட்டிகளைக் கொண்ட இப்போட்டித் தொடரின் முதல் போட்டியே இன்று நாக்பூரில் ஆரம்பமாகவுள்ளன.

இதேவேளை, மும்பாய் தலைவர் அணியுடன் நடைபெற்ற பயிற்சிப்போட்டி ஒன்றில் மூன்று விக்கெட்டுக்களினால் சிறிலங்கா அணி தோல்வியைத் தழுவியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## சிந்தனைக்கு



ஒரு போரின் வெற்றியைத் தீர்மானிப்பது ஆட்பலமோ-ஆயுதபலமோ அல்ல; அசைக்க முடியாத மனவுறுதியும், வீரமும், விடுதலைப்பற்றுமே வெற்றியை நிர்ணயிக்கும் குணாம்சங்கள்.

தமிழீழ தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ்.சாலை,கிளிநொச்சி. 25.10.2005
தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் natham23 ela@ yahoo.com

# வரலாறும் யதார்த்தமும்

கடந்த கால சிங்களத் தலைமைகள் தமிழ்மக்களை ஏமாற்றியது வெளிப்படையானது; தேர்தலில் வென்று புதிதாகப் பதவி ஏற்கப் போகின்றவர்கள் தமிழ்மக்களின் பிரச்சினைக்குத் தீர்வைப் பெற்றுத்தராதுவிட்டால், தமிழ்மக்கள் பிரிந்து சென்று தனிநாடு அமைக்கும் சந்தர்ப்பத்தைச் சர்வதேசம் வழங்க வேண்டும் என்பன போன்ற கருத்துக்கள் சிங்களத்தரப்பில் இருந்து வரத்தொடங்கியுள்ளமை பாராட்டத்தக்கதே.

இத்தகைய அபிப்பிராயங்கள், கூற்றுக்கள் வெளிவந்துள்ளமைக்கான காரணங்கள் சற்று சந்தேகிக்க வைப்பவையாக இருப்பினும் கூட தேவை கருதியாயினும் இத்தகைய பேச்சுக்களைப் பேச வேண்டிவந்துள்ளது என்பதே இன்றைய அரசியல் நிலையாகும். அதாவது கடந்த காலத்தில் தமிழ்மக்களை ஏமாற்றியது போன்று இனியும் தமிழ்மக்களை ஏமாற்ற முடியாது என்பதை உணர்ந்து கொண்டதன் வெளிப்பாடே இதுவாகும்.

இலங்கைத் தமிழ் மக்களைச் சிங்கள அரசியல் வாதிகள் ஏமாற்றியது நீண்ட வரலாறாகும். அதாவது எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்கா காலத்தில் இருந்து அவரது மகள் சந்திரிகா வரையில் தமிழ்மக்கள் ஏமாற்றப்பட்டு வந்தார்கள் என்பதே வரலாறாகும். இவ்வாறு ஏமாற்றிய சிங்களத்தலைவர்கள் மத்தியில் ஆள்வேறுபாடோ கட்சி வேறுபாடோ இருக்கவில்லை.சிங்கள ஆட்சியாளர்கள் தமிழ் மக்களைப் போட்டி போட்டு ஏமாற்றினர் என்றே கூறலாம்.

இத்தகையதொரு நிலைப்பாட்டையே சிங்களத்தலைவர்கள் இன்னமும் கொண்டுள்ளனர். அதாவது தமிழ்மக்களுக்கு வாக்குறுதிகளை வழங்குவதன் மூலம் அவர்களிடம் இருந்து வாக்குகளைப்பெற்று தேர்தலில் வெற்றி பெற்றுவிடலாம் என தாம் எண்ணுவதோடு, கடந்த காலம் போன்றே வாக்குறுதிகளை நிறைவேற்றாது தமிழ் மக்களை ஏமாற்றி விடலாமெனவும் எண்ணுகிறனர்.

எடுத்துக் காட்டாக, 1994 ஆண்டு பொதுத்தேர்தல் மற்றும் சனாதிபதித் தேர்தலில் சந்திரிகா குமாரதுங்க அளித்த வாக்குறுதிகளை நம்பி அவருக்கு மக்கள் வாக்களித்தனர். ஆனால், சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தமிழ் மக்களுக்கு ஏமாற்றமே பரிசாக அளித்தார். அது மாத்திரமின்றி பெரும் போர் ஒன்றையும் கட்டவிழ்த்து விட்டார்.

அதேபோன்றே ரணில் விக்கிரமசிங்கவிற்கு 2001 ஆம் ஆண்டு பொதுத்தேர்தலில தமிழ் மக்கள் ஆதரவு அளித்தனர். ஆனால் ரணில் விக்கிரமசிங்க தம் தமிழ் மக்களின் எதிர்பார்ப்பை நிறைவு செய்யவில்லை. சமாதான முயற்சிகளிலே அரசியல் தீர்விலோ அவரால் முன்னேற்றம் காணமுடியவில்லை.

ஆனால் இலங்கையின் முதல் பிரதம மந்திரியில் இருந்து தற்போதைய சனாதிபதி வரையில் தமிழ் மக்களை ஏமாற்றினர் ஏமாற்ற முற்பட்டனர். ஆனால் முன்னைய தலைமைகள் போன்று தற்போதைய தமிழ் மக்களின் தலைமை ஏமாறுவதற்குத் தயாராக இல்லை. அதேபோன்று தமிழ்மக்களும் ஏமாறுவதற்குத் தயாராக இல்லை.

தமிழ் மக்களின் உரிமைக்கான போராட்டத்தை வழிநடத்தும் தேசியத்தலைவர் பிரபாகரன் அவர்கள் முன்னைய தலைவர்கள் போன்று ஏமாறக்கூடிய நிலையில் இல்லை. ஏனெனில் பணிந்து போய் சமரசம் செய்ய வேண்டிய தேவை அவருக்கு இல்லை. அவர் பலமான நிலையில் உள்ளார்.

அதேபோன்றே தமிழ்மக்களும் சிங்கள அரசியல் வாதிகளிடம் ஏமாறும் நிலையில் இல்லை.தமிழ் மக்களின் நீண்ட பட்டறிவானது சிங்களத்தலைவர்கள், கட்சிகள் மீது நம்பிக்கை வைப்பதற்குத் தயாராக இல்லை. சுருக்கமாகக் கூறுவதனால் தமிழர்களைப் பொறுத்து ஏமாறுவது என்பது இறந்த காலமாகிவிட்டது.

ஆகையினால் தற்போதைய அரசியல் யதார்த்தம் என்பது தமிழர்களின் உரிமைகள் அதிகாரங்களைப் பகிர்ந்தளித்தால் இணைந்து வழலாம் என்பதே. அவ்வாறு இல்லாது விடில் பிரிந்து சென்று வாழ்வதற்கு அனுமதிக்கப்பட வேண்டும் என்பதே.இதனை சிறிலங்காவின் அரசியல் யாப்பில் இடமில்லை என்பதோ, இலங்கைத்தீவு தனி ஒரு அரசு என்ற கோட்பாடோ தடுத்து நிறுத்திவிட முடியாது.

அதாவது இன்றைய அரசியல் யதார்த்தம் என்பது உரிமைகளை வழங்கு; அதிகாரங்களைப் பகிர்ந்தளி என்பதே ஆகும். இதற்கு அப்பால் தமிழ்மக்கள் சிங்கள அரசியல் வாதிகளின் வாக்குறுதிகளை நம்பவோ அன்றி மிரட்டல்களுக்குப் பணிந்து போகவோ, தயாராக இல்லை என்பதே இன்றைய அரசியல் நிலை யாகும்.

இதன் வெளிப்பாடே தமிழரின் உரிமைகளைப் பகிர்ந்தளிக்காது விடின் தனியரசு அமைக்கும் சந்தர்ப்பத்தை வழங்குதல் வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ள அபிப்பிராயம் ஆகும். வேறுவிதமாகக் கூறுவதானால், யதார்த்தம் வெளிப்படுத்தப்பட்டுள்ளது எனலாம். அதாவது இனப்பிரச்சினைக்கு தீர்வு காணப்படாதுவிட்டால் தனியரசு அமைவதென்பது தவிர்க்கப்பட முடியாது என்பதே இன்றைய அரசியல் யதார்த்தமாகும். இதனைச் சிறிலங்கா அரசால் தடுத்து நிறுத்திவிட முடியாது. ஆகையினால் சர்வதேச சமூகம் நிலவரத்தைப் புரிந்துகொண்டு தமிழருக்கான தனியரசைஅங்கீகரிக்க முன்வர வேண்டும்.

# சர்வதேச சமூகத்தின் தலையீடு இன்றி

# புலிகளுடன் பேச்சு நடத்தப்படும்

## -மகிந்தராஜபக்ஷ கூறுகின்றார்

(கொழும்பு)

விடுதலைப்புலிகளுடன் நேரடிப் பேச்சு நடத்தப்படும் வரையில் சர்வதேச சமூகத் தலையீட்டுக்கு அனுமதி இல்லை எனப் பிரதமரும் சனாதிபதி வேட்பாளருமான மகிந்தராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

மாத்தளை தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் மகிந்த ராஜபக்ஷ பேசிய போதே இவ்வாறு தெரிவித்தார். இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண நேரடிப் பேச்சுக்களில் பங்கேற்குமாறு தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு அழைப்பு விடுக்கப்படும். இதில் சர்வதேச சமூகத்தின் அனுசரணைக்கு இடமளிக்க மாட்டோம். எனது வேண்டுகோளை தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் ஏற்றுக்கொள்வார் என்று நம்புகிறேன். நாம் உருவாக்கப்போகும் புதிய உலகில் பயங்கரவாதத்துக்கு இடமிருக்காது. தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவருடனான பேச்சுக்களை நடாத்தும் போது தென்னிலங்கை அரசியல் தலைவர்களுடன் இனப்பிரச்சினைக்குத் தீர்வு தொடர்பாக இணக்கப்பாடு உருவாக்கப்படும். ஏற்கனவே தென்னிலங்கையின் 23 அரசியல் கட்சிகள் ஒருமித்த கருத்துக்களுடன் எம்முடன் இணைந்துள்ளன. ஐக்கிய தேசியக் கட்சிக்கும் அழைப்பு விடுக்கப்படும். ஐக்கிய தேசியக் கட்சியின் பெரும்பான்மையான தலைவர்கள் என்னுடனும் எமது கூட்டமைப்பின் கொள்கைகளுடன் ஒத்துப்போகிறவர்கள் தான். ஐக்கிய தேசியக் கட்சி என்பது ரணில் விக்கிரமசிங்க மட்டுமல்ல கிழக்கு மாகாண முஸ்லிம்களின் கவலைகளை நாம் உள்வாங்குகிறோம். ஹக்கீமைத்தவிர அனைத்து முஸ்லிம் தலைவர்களும் எம்முடன் உள்ளனர். தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு சமமான தகுதியை முஸ்லிம்களுக்கும் நாம் அளிப்போம்

சனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்படும் மூன்றே மாதங்களில் இனப்பிரச்சினைக்கான தீர்வு குறித்த இணக்கப்பாட்டை தென்னிலங்கையில் எம்மால் உருவாக்க முடியும். தமிழீழ விடுதலைப் புலிகள் திறந்த மனதுடன் முன்வைக்கிற கோரிக்கைகளை செவிமடுக்க தயாராக உள்ளோம். சிறிலங்காவின் ஒற்றையாட்சித்தன்மையை பாதுகாப்பது தொடர்பாக விடுதலைப் புலிகளுடனான பேச்சுக்களில் நாம் வலியுறுத்துவோம். தமிழர் தனித் தாயகக் கோட்பாட்டு நிலையைக் கைவிடுமாறு புலிகளை வற்புறுத்துவோம்.இந்த நாடானது சிங்களவர், முஸ்லிம்கள், தமிழர்கள் உள்ளிட்ட அனைவருக்குமான தாயகம். ஒற்றையாட்சி முறையிலான தீர்வுக்குத் தென்னிலங்கை அரசியல் கட்சிகளின் இணக்கப்பாட்டை உருவாக்குவோம். இது போன்ற பிரச்சினைகளுக்கு சர்வசன வாக்கெடுப்பு உதவும். இனப்பிரச்சினை தொடர்பாக இந்தியாவின் ஆலோசனைகள் கேட்டுப்பெறப்படும். இந்தியாவை அனுசரணையாளராகவோ நடுநிலையாளராகக் கொள்ளாமல் பிராந்திய நட்பு நாடு என்கிற வகையில் அந்நாட்டின் ஆலோசனைகள் பெறப்படும் எனறார் மகிந்தராஜபக்ஷ.

# ஐ.ஒன்றியத்தின் புலிகள் மீதான பயணத்தடை

# அமைதிப்பேச்சுக்கெதிரான முடிவாகும்

## -ஜே.வி.பி.யின் ஆரம்பகால உறுப்பினர் ஜோர்ஜ்மெண்டிஸ்

யுத்தத்துக்கு எதிரான ஒவ்வொரு சிங்களவரையும் ஐரோப்பிய ஒன்றியத்தின் தமிழீழ விடுதலைப்புலிகள் மீதான பயணத் தடை வருத்தமடையச் செய்துள்ளது. இது ஐரோப்பிய ஒன்றியம் அமைதிப்பேச்சுக்களுக்கு எதிராக எடுத்த முடிவாகும் எனப் பெல்ஜியத்தில் நடைபெற்ற உரிமை முழக்கப் போராட்டத்தில் கலந்து கொண்ட ஜேர்மனியைச் சேர்ந்த ஜே.வி.பி யின் ஆரம்பகால உறுப்பினரான ஜோர்ஜ்மெண்டிஸ் தெரிவித்துள்ளார்.

தமிழீழத்தின் திருகோணமலை துறைமுகத்தின் மீது ஆதிக்கம் செலுத்தவே பிரிட்டன், ஐரோப்பிய ஒன்றியத்தின் தலைமைப் பொறுப்பிலிருந்துகொண்டு விடுதலைப்புலிகள் மீது பயணத்தடை விதித்துள்ளது.

யுத்தத்துக்கு எதிரான ஒவ்வொரு சிங்களவரையும் ஐரோப்பிய ஒன்றிய முடிவு வருத்தமடையச் செய்துள்ளது. ஐரோப்பிய ஒன்றியத்தின் முடிவு சிங்களத் தீவிரவாதிகளை வலுப்படுத்தியிருக்கிறது. இந்த முடிவானது நோர்வே அனுசரணை மீதான ஒரு தாக்குதல். இம்முடிவு மூலம் சிறிலங்கா சனாதிபதித் தேர்தலில் சிங்களத் தீவிரவாதிகள் வலுவாக நிற்கிறார்கள். இலங்கை இனப்பிரச்சினையில் ஐரோப்பிய ஒன்றியம் தான் பேச்சு மேசைக்கான இடமாக இருக்கிறது. இப்போது விடுதலைப் புலிகளை ஐரோப்பிய ஒன்றியத்திற்கு வரக்கூடாது என்று கூறுவதன் மூலம் அமைதிப்பேச்சுக்களுக்கு எதிராக ஐரோப்பிய ஒன்றியம் நிற்பதாக உள்ளது. ஐரோப்பிய ஒன்றியத்தின் முடிவு விலக்கிக்கொள்ளப்பட்டால் அமைதியை விரும்பும் சிங்களவர்கள் மகிழச்சியடைவார்கள்.விடுதலைப்புலிகளின் ஆயுத நடவடிக்கைகள், சிறார் படைசேர்ப்பு என்கிற காரணங்களால் தான் தடைவிதிக்கப்பட்டதாகக் கூறுகிறார்கள். ஆனால் உண்மையான காரணம் என்ன? ஐரோப்பிய ஒன்றியத்தின் தலைமைப்பொறுப்பை பிரிட்டன் ஏற்றதுதான் காரணம். ஏன் பிரிட்டன் இதைச்செய்யவேண்டும்? இலங்கையில் உள்ள திருகோணமலைத் துறைமுகத்தின் மீது ஆதிக்கம் செலுத்துவதற்குத்தான் பிரிட்டன் இந்த முடிவை மேற்கொண்டிருக்கிறது. பிரிட்டன்-இந்தியப்படைகள் திருமலைத் துறைமுகம் மீது ஆதிக்கம் செலுத்த முனைகின்றன. இலங்கை இராஜதந்திர முக்கியத்துவம் வாய்ந்த நாடாக இருக்கிறது. இதற்காக சிங்களவர்களிடம் ஆதிக்கத்தைக் கொடுப்பது தான் பாதுகாப்பு என்று பிரிட்டன் எண்ணுகிறது என ஜோர்ஜ் மெண்டிஸ் மேலும் தெரிவித்துள்ளார்.

# ஆழிப்பேரலை நிதி முறைகேடு

# சிறிலங்கா அரசாங்கம் பதில்

(கொழும்பு)

ஆழிப்பேரலை நிதி முறைகேடுகள் தொடர்பாக சிறிலங்கா கணக்குத்தணிக்கையாளர் தெரிவித்த குற்றச்சாட்டுக்களுக்கு சிறிலங்கா அரசாங்கம் பதிலளித்துள்ளது. கணக்குத் தணிக்கையாளர்களுக்கு திறைசேரிச் செயலாளர் பி.பி ஜயசுந்தர அனுப்பியுள்ள கடிதத்தில் கடந்த ஜூலை 31 ஆம் நாள் வரையில் ஆழிப்பேரலை நிவாரண நிதியில் 13.5 வீதம் தான் பயன்படுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. மொத்த ஆழிப்பேரலை நிவாரண நிதியாகப் பெறப்பட்டிருப்பது 1,168.80 மில்லியன் ரூபாய் மட்டுமே. இது ஆறு துறைகளின் கீழ் பெறப்பட்டது. நிவாரண நிதியாக வரவேண்டியது. 3.4 பில்லியன் டொலர். தற்போது பயன்படுத்தப்பட்டிருக்கும் தொகையானது 927 மில்லியன் டொலராகும். இது 35 வீதமாகும். வீடமைப்புத்திட்டங்களைப் பொறுத்தவரையில் அரசசார்பற்ற நிறுவனங்கள் ஒப்புக்கொண்டபடி பணிகளை முடிக்கவில்லை. ஓகஸ்ட் மாத அறிக்கைக்கும் தற்போதைய கணக்குத் தணிக்கை அறிக்கைக்கும் முரண்பாடுகள் உள்ளன. 3200 வீடுகள் அமைக்கப்பட்டுள்ளன. வெறும் 1,055 வீடுகள் மட்டுமே கட்டிமுடிக்கப்பட்டன என்பது தவறானது. ஒவ்வொரு கணக்கு தணிக்கை அறிக்கையும் மக்களது நிதி சரியாக பயன்படுத்தப்படவில்லை என்று கூறப்படுவது வழமையாக உள்ளது. கணக்குத் தணிக்கை முறையை மாற்றியமைப்பது குறித்து பரிசீலிக்க வேண்டுகிறோம் என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தமிழர் மீதான துன்புறுத்தலை நிறுத்த

# பொலிஸ்மா அதிபரிடம் ஜோசப் கோரிக்கை


(மட்டக்களப்பு)

அவரசகாலச் சட்டம் மற்றும் தேர்தலுக்கான பாதுகாப்பு என்ற பெயர்களில் தமிழ் மக்களை தொடர்ந்தும் கைதுசெய்து துன்புறுத்த வேண்டாம் என்று தமிழ் தேசிய பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் சிறிலங்கா பொலிஸ்மா அதிபரிடம் அவசர வேண்டுகோள் ஒன்றை விடுத்துள்ளார்.

சனாதிபதித் தேர்தல் என்ற போர்வையில் கொழும்பில் கைதுகள் மேற்கொள்ளப்படுகின்றன. முக்கியமாக தமிழர்கள் தான் கைது செய்யப்படுகின்றார்கள். இது திட்டமிட்டு தமிழர்களை பயமுறுத்தும் செயலாகும். ஏனென்றால் சனாதிபதித்தேர்தல் சம்பந்தமாக பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்கின்றோம் என்று கூறி தமிழர்களை மாத்திரம் தொந்தரவு செய்வது நிறுத்தப்படவேண்டும். அவசரகாலச் சட்டத்தைப் பயன்படுத்தி இப்படியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவது கண்டிக்கத்தக்க விடயமாகும். எனவே இது சம்பந்தமாக நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். இது தடுத்து நிறுத்தப்படவேண்டும் என்று அவர் பொலிஸ்மா அதிபரிடம் கோரிக்கைவிடுத்துள்ளார்.

# பெல்ஜியத்தில் "எழுக தமிழ்" நிகழ்வு








## யாழ்.மக்கள் படைக்கட்டுமானத்தின்

## பயிற்சி முடித்து 7ஆவது அணி வெளியேற்றம்





தமிழீழமெங்கும் மக்கள் படைகளைக் கட்டியெழுப்பும் நோக்குடன் தமிழீழ தேசியத்தலைவர் அவர்களினால் திட்டமிடப்பட்டு மக்கள் படைக்கட்டுமானத்திற்கான பயிற்சிகள் நடைபெற்ற வண்ணம் உள்ளன. அந்த வகையில் யாழ்.மாவட்டத்திற்கான மக்கள் படைக் கட்டுமானத்தின் ஏழாவது பயிற்சி அணி நேற்று மாலை 6.00 மணியளவில் தனது பயிற்சியினை நிறைவு செய்து வெளியேறியது.

### தேசிய..

கண்டுள்ளனர். இது தொடர்பில் மேலும் பல சுற்றுப்பேச்சுவார்த்தைகளை நடத்தவும் இருவரும் இணங்கியுள்ளனர்.இதேவேளை சுயாதீனமான முறையில் சனாதிபதித் தேர்தலை நடத்தவும், தேர்தலுக்குப் பின்னர் வன்முறைகளைத் தடுப்பது குறித்தும் இரண்டு தலைவர்களும் கருத்துக்களைப் பரிமாறியுள்ளனர் .(32)

### கூட்டமைப்பு...

மக்களும் இணைந்து ஏற்பாடு செய்துள்ள தமிழ் எழுச்சி நிகழ்வானது பாதுகாப்பு தரப்பினரின் இடையூறுகள் இல்லாத நிலையில் நடைபெற வேண்டும் என தாம் கண்காணிப்பு குழுவினரிடம் கேட்டுக் கொண்ட தாகவும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை வவுனியாவில் கிராமசேவகர் வீரசிங்கம் கடந்த வாரம் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவம், வெகுஜன அமைப்புக்களின் தலைவர்களின் வீடுகள் மீது மேற்கொள்ளப்பட்ட கைக்குண்டுத் தாக்குதல் சம்பவம் என்பன குறித்து போர்நிறுத்த கண்காணிப்புக் குழுவினர் உரிய விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும் எனத் தான் கேட்டுக் கொண்டதாகவும் அவர் தெரிவித்தார்.

இலங்கை போர்நிறுத்தகண்காணிப்புக் குழுவின் வவுனியா அலுவலகத்தில் இடம்பெற்ற இந்தச் சந்திப்பில் கண்காணிப்பு குழுவின் வவுனியா பிரதிநிதி சிவநாதன் கிஷோர்,சிவசக்தி ஆனந்தன்,வினோ நோகராதலிங்கம், தமிழ் எழுச்சி மாநாட்டின் ஏற்பாட்டாளர்களும் கலந்து கொண்டுள்ளனர்(32)

### ஐரோப்பிய...

கழக அரசியல் பொருளாதார பேர்சிரியர் ப. இராமசாமி, ஜேர்மனியைச் சேர்ந்த அருட்திரு அல்பேட்கூலன், ஐக்கிய இராச்சியத்திலிருந்து திருமதி.எலிசாமான், டென்மார்க்கிலிருந்து மகேஸ்வரன் மற்றும் நோர்வேயிலிருந்து யோகராஜா பாலசிங்கம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

### வீரவணக்கம்..

(நாகராசா புலேந்திரன் பாடசாலை வீதிகிரான் ,மட்டக்களப்பு,தற்போதைய முகவரி இலுப்படிமாரி கிரான் மட்டக்களப்பு) என்ற போராளியே சாவடைந்தவராகும். இவருக்கு தமிழீழ விடுதலைப்புலிகள் வீரவணக்கம் செலுத்துகின்றனர்.

### விடுதலைப்..

யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரன், தமிழ்நாட்டு விடுதலைச்சிறுத்தைகள் இயக்கப்பொதுச்செயலாளர் தொல். திருமாவளவன் ஆகியோர் நூல் வெளியீட்டு விழாவில் பங்கேற்றனர்.

நிகழ்வில் கலை நிகழ்ச்சிகளும் நடாத்தப்பட்டன.

### ஈழத்தமிழர்..

கொள்கைகளைப் பலர் மறந்து விட்டனர். நாங்கள் அந்த இயக்கத்தின் அடிநாத கொள்கைகளையும் கட்டிக் காத்து வருகிறோம்.

இலங்கைத் தமிழர்களுக்கு அடிப்படை உரிமை கொடுப்பதில்லை என்ற விடயத்தில் இலங்கைப் பிரதமர், அதிபர் இருவரும் தமிழர்களுக்கு எதிரான கருத்துகளுடன் இருக்கின்றனர். அநீதி எங்கு நடந்தாலும் அதைத் தட்டிக் கேட்போம்.

தோல்வியைச் சந்திக்கும் கட்சியில் கட்டுப்பாடுகளைப் பார்ப்பது கடினம் வெற்றிமேல் வெற்றிகளைச் சந்திக்கும் கட்சியில் கட்டுப்பாடு காண்பது மிகவும் எளிது. ம.தி.மு.க பல தோல்விகளைச் சந்தித்தாலும் கட்சித் தொண்டர்கள் கட்டுப்பாட்டுடன் இருக்கின்றனர்.

கடந்த 1996 ஆம் ஆண்டு சட்டசபைத் தேர்தலில் ம.தி.மு.க ஒரு தொகுதியைக் கூடப் பிடிக்கவில்லை. இது போன்ற சோதனைகளை சந்தித்த ம.தி.மு.க தற்போது வலுவான இயக்கமாக மாறியுள்ளது. திராவிட இயக்கத்தின் அடிப்படைக் கொள்கைகளை கட்டிக்காத்து வருகிறது என்றார் வைகோ.

### நெப்போலியன்..

தொல்.திருமாவளவன் தெரிவித்துள்ளார்.

தப்பித்தால் போதும் என்று ஓடியது இந்திய இராணுவம். பின்னர் தமிழர்களை நசுக்குவதற்கு அமெரிக்காவின் உதவியை சிறிலங்கா இராணுவம் நாடியது. அமெரிக்காவின் முக்கிய தளபதிகள் போர்க்களத்தில் சிங்கள இராணுவத்துக்குப் பயிற்சி அளித்தனர். புலிப்படை இப்படித்தான் சிந்திக்கிறது. புலித் தலைவன் இப்படியெல்லாலம் உத்தரவிடுகிறார் என்று கூறிப் பயிற்சி கொடுத்தது. ஆனால் அமெரிக்க இராணுவத் தளபதிகளே புறமுதுகிட்டு ஓட ஆனையிறவில் வெற்றி பெற்றோம். அண்ணன் பிரபாகரன் இராணுவ ரீதியாக எடுத்த ஒவ்வொரு முடிவும் உலகத்தின் கண்களை அகல விரித்துக் காட்ட வைத்திருக்கிறது. வியப்பில் ஆழ்த்த வைத்திருக்கிறது. ஒட்டு மொத்தத்திற்குமான தலைவர் பிரபாகரன். தமிழீழத்துக்கு மட்டுமல்ல தமிழகத்திற்கும் தலைமை தாங்குகிற தலைவர் பிரபாகரன்தான்.

அவரது தலைமையின் கீழ் அவர் வாழுகின்ற காலத்திலேயே நாம் தமிழீழத்தை வென்றெடுப்போம்! ஐரோப்பிய ஒன்றியமே! புலிகளின் போக்குவரத்து தடையை நீக்கு! ஐரோப்பியக் கூட்டரசே! உன் செவிகளுக்கு எட்டுகிறதா? தடையை விலக்கு விலக்கு!! தமிழர் வீரம் வெல்லும்! அதைக் காலம் சொல்லும்!! என்றார் திருமாவளவன்.

### தமிழர்களின்...

ஆயிரக்கணக்கில் படுகொலை செய்யப்பட்டபோது இலட்சக்கணக்கில் இடம் பெயர்வுக்காக ஐரோப்பிய நாட்டை நோக்கி அவர்கள் சென்றார்கள். தமிழ் மக்களின் கனவானது தமிழீழம் என்பதை நாம் நன்றாக அறிவோம். மக்கள் பட்ட கஷ்டங்களை நாம் அறிந்த கொண்டோம். 2002 ஆம் ஆண்டு சமாதான ஒப்பந்தம் செய்யப்பட்டது. அதனால் தமிழ் மக்களும் நாங்களும் சுதந்திரம் கிடைத்துவிடும் என்று எதிர்பார்த்தோம். ஆனால் எல்லோருக்கும் தெரியும் என்ன நடந்தது என்று. சமாதான ஒப்பந்தத்தில் சொல்லப்பட்ட எதையும் சிறிலங்கா அரசாங்கம் கடைப்பிடிக்கவில்லை. தமிழர்களுக்குஎதிரான சிறிலங்கா அரசாங்கத்தின் தற்போதைய நடவடிக்கைகள் மிகக் கடுமையாக உள்ளன. நாங்கள் இங்கிருந்து ஐரோப்பிய ஒன்றியத்திற்கு அழுத்தம் கொடுத்து வந்தோம். ஆனால் எதிர்மாறான சம்பவங்களே நடைபெற்றன.

தமிழீழ விடுதலைப்புலிகள் மீதான பயண வரவேற்பு மறுப்பானது ஒருபக்கச் சார்பானது. இலங்கை இனப்பிரச்சினையில் ஐரோப்பிய ஒன்றியம் நடுநிலை வகிக்க வேண்டும் என்பதை வலியுறுத்த நாம் கூடியுள்ளோம். ஐரோப்பிய ஒன்றியத்தின் முடிவு இனவாதத்தை வெளிப்படுத்துகிறமுடிவு. ஐரோப்பிய ஒன்றியம் தமிழர்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்கவேண்டும். சுதந்திரமான தமிழீழம் மலர்வதை எல்லோரும் எதிர்பார்க்கின்றோம் என்றார் அவர்.

இந்த நிகழ்வில் பங்கேற்க தமிழர்கள் தமிழீழத்தேசியக்கொடி, தமிழீழத் தேசியத் தலைவர் அவர்களின் படம் மற்றும் தமிழீழ சின்னங்களை ஏந்தியும் சிவப்பு மஞ்சள் உடை அணிந்தும் பங்கேற்றனர். பல்வேறு புகலிடப்பிரதேசங் களிலிருந்தும் 15ஆயிரத்திற்கும் அதிகமான தமிழ் மக்கள் பேரெழுச்சியுடன் திரண்டிருந்தது ஐரோப்பியர்களின் கவனத்தை திசை திருப்பியிருப்பதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

### கொட்டும்...

கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரன் ஏற்றினார்.

இதனையடுத்து தமிழகத்தின் விடுதலைச்சிறுத்தைகள் இயக்கப் பொதுச் செயலாளர் தொல். திருமாவளவன் உரை நிகழ்த்தினார்.

இதைத்தொடர்ந்து எங்கள் மூச்சு தமிழீழமே!

எங்கள்நிலம் தமிழீழமே!

சூரியத்தேவன்! பிரபாகரன்!

தலைவா! நாம் இருக்கிறோம் தலைவா!

ஐரோப்பிய ஒன்றியமே தடையை நீக்கு!!

என்ற முழக்கங்கள் தமிழிலும், ஆங்கிலத்திலும் பிரெஞ்சு மொழியிலும் எழுப்பப்பட்டன.

இதற்கு முன்பாக இந்தப் பேரணியில் பங்கேற்பதற்காக அனைத்து நாடுகளிலிருந்தும் புகலிடத் தமிழர்கள் வானூர்திகளிலும் தங்களது வாகனங்களிலும் பேருந்துகளிலும் அலை அலையாக பெல்ஜியம் நோக்கி திரண்டு வந்திருந்தனர்.

புகலிட நாடுகளில் இயங்கி வரும் அனைத்து சமூக, கலாச்சார, அரசியல் மகளிர், இளையோர் மற்றும் விளையாட்டுக் கழத்தினரும் முதல் முறையாக இப்பேரணிக்காக ஒன்று திரண்டனர். ஜேர்மன், பிரான்ஸ், சுவிஸ், நெதர்லாந்து நாடுகளிலிருந்து பதினையாயிரத்திற்கும் அதிகமானோர் இப்பேரணியில் கலந்து கொண்டனர். இவர்களின் போக்குவரத்திற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டிருந்தன.

அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய ஒன்றிய நாடுகளில் தமிழர் அமைப்புகளுடன் இணைந்து பணியாற்றும் சர்வதேச மனித உரிமைச் செயற்பாட்டாளர்களும் இந்தப் பேரணியில் உரையாற்றினர்.

தமிழீழத்திலிருந்து தமிழ் தேசியக் கூட்டமைப்பின் சிறிலங்காப் பாராளுமன்ற உறுப்பினர்களும் நேற்றைய பேரணியில் பங்கேற்றனர்.

இதேவேளை பேரணியின் முடிவில் பிரகடனமும் வெளியிடப்பட்டன. இலங்கைத்தீவின் இணக்க முயற்சிகளில் ஐரோப்பிய சமூகம் நீதியானதும் பாரபட்சமற்றதுமான பங்கை வகித்தல் வேண்டும்.

இலங்கைத்தீவின் சமாதானப் பேச்சுக்களிலும், போர்நிறுத்த உடன்பாட்டிலும் சம தரப்பாகப் பங்கேற்கும் தமிழர்களின் தேசியத் தலைமையான தமிழீழ விடுதலைப்புலிகளை அங்கீகரித்து கௌரவமாக நடாத்துதல் வேண்டும். இலங்கைத்தீவின் வடக்கு கிழக்கினை தாயகமாகக் கொண்ட தமிழ் மக்களின் தாயகம், தேசியம், சுயநிர்ணயம் என்பனவற்றைக் தளமாகக் கொண்ட அரசியல் நிலைப்பாட்டை ஐரோப்பிய சமூகம் ஆதரித்து மதித்து சமாதான முயற்சிக்கு ஆதரவு தரல் வேண்டும். விடுதலைப்புலிகளுக்கும், தமிழ் ஊடகவியலாளர்களுக்கும் புத்திஜீவிகளுக்கும் எதிராக சிறிலங்கா இராணுவ உளவுத்துறையினால் நடாத்தப்படும் நிழல் போரைப் பயங்கரவாதம் என ஐரோப்பிய சமூகம் பகிரங்கமாக பிரகடனப்படுத்தல் வேண்டும்.

ஐரோப்பாவில் வாழும் தமிழ் மக்கள் இலங்கைத்தீவில் ஒடுக்கப்பட்டு, துன்புறும் தமிழ் மக்களிற்கு ஆதரவு தருவதற்கும் அவர்கள் மீதான சிறிலங்கா பேரினவாத பயங்கரவாதத்தை எதிர்த்துக் குரல் கொடுப்பதற்கும் உரிமை கொண்டவர்கள் என்பதை ஐரோப்பிய சமூகம் ஏற்றுக் கொள்ளல் வேண்டும். ஆகிய கோரிக்கைகள் அந்தப் பிரகடனத்தில் இடம் பெற்றுள்ளன.

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 25 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.